விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 22 சனிக்கிழமை (04.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

## அடுத்த அமர்விலும் சிறுபிள்ளைத்தனமா?

# வடக்கு அமைச்சரொருவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம்!



## கொண்டுவர திட்டம் நடப்பதை முதலமைச்சர் சி.வி போட்டுடைப்பு

(புதுக்குடியிருப்பு)

வடக்கு மாகாண அமைச்சர்களில் ஒருவருக்கு எதிராக சில உறுப்பினர்களின் ஏற்பாட்டில் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான திட்டத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போட்டுடைத்துள்ளார். நேற்றைய தினம் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே குறித்த தகவலினை முதலமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## அதிகரித்த இராணுவ பிரசன்னத்தால் வடக்கு-கிழக்கில் அச்சம் நீடிப்பு

### தேசிய சமாதான பேரவை விமர்சிப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கில் அதிகரித்த இராணுவ பிரசன்னம், அமைதிக்கு உகந்ததல்ல என்று தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார். தேசிய சமாதானத்திற்காக சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சர்வமத சமூகங்களிடையே ஒருமைப்பாட்டை வலுவூட்டும் அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்கால அரசியல் சூழலில் தேசிய சமாதானப் பேரவையின் வகிபாகம் எனும் தொனிப்பொருளில் உரையாற்றிய அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இராணுவத்தினர் இன்னமும் வடக்கு கிழக்கு வாழ் மக்களது வாழ்விடங்களில் நிலைகொண்டிருப்பதால் அமைதிக்கான சூழ்நிலை இப்பொழுதும்

23ஆம் பக்கம் பார்க்க....

## சுகாதார தொண்டர்களுக்கு

## நிரந்தர நியமனம் கிடைக்காமைக்கு வட சுகாதார அமைச்சரே காரணம்!

### ஆளுநர் கூரே சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்காமைக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமே காரணம் என்ற கருத்துப்பட வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் நேற்றைய தினம் ஆளுநரது அலுவலகம் முன்பாக கூடியிருந்தனர்.

காலை ஒன்பது மணிமுதல் ஆளுநரது அலுவலகம் முன்பாக கூடியிருந்த சுகாதார தொண்டரகள், பிற்பகல் 2 மணிவரை அங்கேயே ஆளுநருடன் சந்திப்புக்காக காத்திருந்து ஆளுநரைச் சந்தித்து

23ஆம் பக்கம் பார்க்க....

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாங்குளம் ஒலுமடு பகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியே மேற்படி விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த விபத்தில் புலுமச்சிநாதகுளம் மாங்குளத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்லையா தங்கவேல் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் தற்போது மாங்குளம் ஆதார வைத்தியசாலையில்

24ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சரின் வேண்டுகோளை புறந்தள்ளி

## தமிழ் மக்கள் வாழ்கின்ற நிலத்தில் இராணுவத்தினருக்கு குடியிருப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் நீண்டகாலமாக தமிழ் மக்கள் வாழ்ந்த நிலத்தை அந்த மக்களுக்கே வழங்குங்கள் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்திருந்த வேண்டுகோளையும் பொருட்படுத்தாமல் அந்த நிலத்தில் இராணுவத்தினருக்கான குடியிருப்பு அமைக்கும் முயற்சிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும், அங்கு வாழ்ந்த தாம் அச்சுறுத்தி வெளியேற்றப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாவற்குழி பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான 90 ஏக்கர் நிலத்தில் 30 ஏக்கர்

24ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் சிற்றூர்தி நடத்துநர், சாரதி மீது இ.போ.ச ஊழியர்கள் வழிமறித்து தாக்குதல்

### இரு தரப்பும் மோதலுக்கு கூடியதால் கோண்டாவிலில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலைக்கு முன்பாக இ.போ.ச ஊழியர்களினால் வழிமறிக்கப்பட்ட தனியார் சிற்றூர்தியின் சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சம்பவ இடத்தில் இரு தரப்பினர்களும் மோதலுக்காக ஒன்றுகூடியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

எனினும் சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் நிலைமையினை கட்டுப்பாட்டிறகுள் கொண்டு வந்தனர். இத் தாக்குதல் சம்பவத்தில் சிறு காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட தனியார் சிற்றூர்தி சாரதி மற்றும் நடத்துநரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தாக்குதலுக்குள்ளான தனியார் சிற்றூர்தியினர் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி

24ஆம் பக்கம் பார்க்க....

## சத்தியலிங்கத்தை அச்சுறுத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திற்கு தொலைபேசி மூலமாக மரண அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரியதாக சந்தேகநபரொருவரை வவுனியா பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகள் மீதான தடை நீடிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு தொடர்ச்சியாக இயங்கி வருவதாகவும் இதனால் தடையை நீடிப்பதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு செயற்பட்டு வந்ததாகவும்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு சீனா விசேட அழைப்பு

(கொழும்பு)

இருநாட்டு உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன ஜனாதிபதி ஜின்பிங் விஷேட அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்

24ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தனின் முயற்சியை குழப்ப சதித்திட்டம்

### நீதி அமைச்சர் விஜேதாஸ கருத்து



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பலவழிகளிலும் முயற்சி

24ஆம் பக்கம் பார்க்க....

**மணல் ஜாட்டுக்கான உழவு இயந்திரம் ஒப்பந்த அடிப்படையில் கோருதல்**

மேற்படி பனிக்கம்குளம் மணல்ஜாட் வேலைக்காக உழவு இயந்திரம், உழவு இயந்திரத்துக்கான சாரதிகள், மணல் ஏற்றுபவர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தொடர்புகளுக்கு :- 021 561 0512
021 561 0513
077 82 34767

(4849)



**மக்கள் சக்தி அமைப்பின் கண்ணீர் அஞ்சலி**



சமூகப்புரவலர்
வித்தியாதானக் கீர்த்தி
**மாணிக்கம் சுப்பிரமணியம்**

எம் இனத்தின் கல்விக்கும், சமூக பணிக்கும் தற்துணிவுடன் தோள் கொடுத்த கொடை வள்ளல், சமூகப்புரவலர், வித்தியாதானக் கீர்த்தி மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களது மறைவு எம்மையும் எம் இனத்தையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது பிரிவைத் தாங்காது தவிக்கும் உள்ளங்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமூகப் புரவலனே நீ எம் இனத்திற்கு செய்த
உதவிகளை மறந்திட முடியுமா மறந்து
விட்டால் நாம் அறிவு படைத்த மானிடர் என்று
கூறமுடியுமா....!

உம் பணி தொடர இனி யார் வருவார் நெஞ்சம்
பொறுக்கவில்லையே இமை மூட கண் மறுக்கின்றது
என்ன செய்வது என்று தெரியவில்லையே
நாம் அடியற்ற மரம் போல இருக்கின்றோம்...!

காலன் ஒரு கணம் சிந்தித்தானா உன்னை எம்மிடமிருந்து
பறிக்க சிறுவர்களுக்கு கல்வியை கொடுத்தாய்
நிழலில் படிக்க கட்டடங்கள் கொடுத்தாய்
படிக்க புத்தகம், கொப்பி கொடுத்தாய் கல்விக்காக
அனைத்தையும் கொடுத்தாய்...!

யாழ். மாவட்டத்தில் பல இன்னல்களுக்கு மத்தியில்
பிறந்து வளர்ந்து உலகறியும் வகையில்
உயர்ந்தீர்கள் ஐயா...!

இந்த பூவுலகில் நீர் மீண்டும் ஓர் மானிடராய் பிறக்க
எம் இனம் காத்திருக்கின்றது, உம்மை வர்ணிக்க
வார்த்தை இல்லை ஐயா...!

(4818)

உம் ஆத்மா சாந்தியடைய எம் இனமும், மாணவர் சமூகமும், மக்கள் சக்தி அமைப்பும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மானிப்பாய் மக்கள் சக்தி அமைப்பு**


# இறைச்சிக்காக மாடு பிடிப்பு ஒருவர் தப்பிப்பு; மூவர் கைது

(வேலணை)

இறைச்சிக்காக கட்டாக்காலி மாட்டினை பிடித்த மூவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் வேலணை வங்களாவடி வெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அப்பகுதியிலுள்ள அம்மன் கோவில் ஒன்றின் பிற்பகுதியில் மாட்டினை நான்கு பேர் கட்டி வைத்திருந்த வேளையில் பொலிஸார் வருவதை அறிந்து ஒருவர் தப்பிச் சென்ற நிலையில் ஏனைய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவுப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளை சட்ட விரோதமாக பிடித்து இறைச்சிக்காக கொண்டு செல்வது தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு மேற்படி சம்பவங்களை தடுக்க வழி செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (செ-11)

# வாக்காளர் விண்ணப்பப்படிவங்களை மீளப் பெறும் நடவடிக்கை ஆரம்பம்

## நாளை தொடக்கம் யூலை 15 வரை

வாக்காளர் விண்ணப்பப் படிவங்களை (பீசிபடிவம்) நாளை தொடக்கம் பொதுமக்களிடம் இருந்து மீளப்பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே காலதாமதமின்றி பீசி படிவங்களை பூர்த்தி செய்து கிராம சேவகரிடம் கையளிக்குமாறு தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

2016ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கான பதிவுகள தறபோது இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் கிராம சேவகர்களினால வீடு வீடாக சென்று வாக்காளர் விண்ணப்பப்படிவங்கள விநியோகிக்கப்பட்டு வந்தன. குறித்த பீசி படிவங்களை மீளப்பெறும் நடவடிக்கைகள நாளை தொடக்கம் யூலை மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

2015 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் (யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்கள்ளை உள்ளடக்கியது) 5 இலட்சத்து 39 ஆயிரத்து 641 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் முக்கியமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் தேசிய ரீதியிலேயே நாடாளுமன்ற ஆசனங்கள் கணக்கிடப்படும். அதனடிப்படையில் யாழ்ப்பாணத தேர்தல் மாவட்டத்திற்கு 6 ஆசனங்களே கிடைக்கப் பெற்றுள்ளன. 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் 7 ஆசனமாக இருந்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், 2015 ஆம் ஆண்டு பட்டியலின் அடிப்படையில் 6 ஆசனமாகக் குறைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு வாக்காளர் மீளாய்வு மேற்கொள்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 9 நாடாளுமன்ற ஆசனங்கள் இருந்தது. மீளாய்வின் பின்னர் 6 ஆசனங்களாகக் குறைவடைந்தது. பின்னர் 2012 ஆம் ஆண்டுடன் அது 7 ஆக அதிகரித்தது. தற்போது மீளவும் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த ஆண்டு தகுதியுடைய சகலரையும் பதிவு செய்ய வைபபதன் மூலம், இந்த எண்ணிக்கை மாற்றத்தை சரி செய்ய முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-9)

# சிவசிதம்பரத்தின் நினைவு தின நிகழ்வு

(கரணவாய்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் 14ஆவது நினைவு தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கரணவாய் மூத்தவிநாயகர் கல்யாண மண்டத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.இரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நினைவுப் பேருரைகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், ஈ.சரவணபவன், இலங்கை தமிழரசுக் கட்சி யாழ்.மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோார் நிகழ்த்தவுள்ளனர். (செ-5-60)

# ஆங்கில தின நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வாழ்வகத்தில் வருடாந்த ஆங்கில தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வாழ்வகத்தின் செல்லா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆங்கில சங்கத் தலைவர் வி.விஜயலதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் கே. சிவாஜி கலந்து கொள்ளவுள்ளார். (செ-5)

# மஹோற்சவம்

(இருபாலை)

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் வரை இடம்பெறும்.

இதற்கமைய 18ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த் திருவிழாவும் 20ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

இம்மஹோற்சவ காலத்தில் சமய அறிவுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (செ-5- 136)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டப திறப்பு விழா நாளை ஞாயிற்றுகிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் த.தேவிகபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (செ-12)


**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**



யாழ்
**கலாலயா**
பயிற்சியகம்
**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

(சி-4800)

**கிழமைநாள் பிரிவுகள்: 10.06.2016 (வெள்ளி)**
**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 11.06.2016 (சனி)**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**
-இயக்குநர்-



**காசாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் சார்ந்த விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு பெண் காசாளர் உடனடியாகத் தேவை.

சுயவிபரத்தினை மாத்திரம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

62/32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-4797)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**நகுலேஸ்வரன் டினோஜன்**

BMICH இல் 02.06.2016 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஊவா வெலச பல்கலைக்கழகத்தினால் BSc (Sp) Tea Technology and Value Addition வழங்கப்பட்ட பட்டத்தினை பெற்றுக் கொண்ட **நகுலேஸ்வரன் டினோஜன்** அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

கொக்குவில்

**வாழ்த்துவோர்**
தாத்தா, அம்மம்மா
பெரியப்பா, பெரியம்மா
தனா, சுனேகா (சகோதரிகள்)
சித்தாமார், சித்திமார்

(4847)

# காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடாக 5 லட்சம் உடன் வழங்க வேண்டும்

## அரசிடம் ஆணைக்குழுவின் தலைவர் பரிந்துரை

(கொழும்பு)

**யுத்தத்தினால் உறவுகளை இழந்துள்ள குடும்பங்களை உரிய முறையில் அடையாளம் கண்டு அரசாங்கம் அவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டஈட்டை ஒரே தடவையில் வழங்க வேண்டும். இது உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும் என்று காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.**



மேலும் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தபோது நான் இதனை உணர்ந்துகொண்டேன். காணாமற் போனவர்கள் தொடர்பில் எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் இராணுவத்தினரை விசாரிக்கவேண்டிய தேவை எமக்கு காணப்படுகின்றது. ஆனால் எமக்கு கால அவகாசம் இல்லாமையின் காரணமாக அவ்வாறு செய்ய முடியாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

காணாமற் போனவர்கள் குறித்த விசாரணை அமர்வுகள் மற்றும் அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில், காணாமற் போனவர்களை விசாரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க எமது ஆணைக்குழுவுக்கு ஜூலை மாதம் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குள் எங்களினால் அனைத்து செயற்பாடுகளையும் முடிக்க முடியாது.

விசேடமாக காணாமற் போனவர்கள் தொடர்பில் எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் இராணுவத்தினரை விசாரிக்க வேண்டிய தேவை எமக்கு காணப்படுகின்றது. ஆனால் எமக்கு கால அவகாசம் இல்லாமையின் காரணமாக அவ்வாறு செய்ய முடியாமல் உள்ளது.

எனவே நாங்கள் அதனை கைவிடுகின்றோம். நாங்கள் யாரையும் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. ஆனால் விசாரணை செய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் அதற்கான அவகாசம் இல்லாமல் இருக்கின்றது. இந்நிலையில் நாங்கள் விரைவில் எமது அறிக்கையை சமர்ப்பிக்கவிருக்கின்றோம். இதே வேளை நான் காணாமற் போன வர்களின் உறவினர்களை சந்தித்து பேசியதிலிருந்து ஒரு விடயத்தை நன்றாக புரிந்துகொண்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சாதாரண தரப் பரீட்சை இனி முக்கியமில்லை!



கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இனி மேல் முக்கியமான ஒன்றாக இருக்காது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த பரீட்சை புதிய கல்வி கட்டமைப்பின் அடிப்படையில் வெறுமனே மாணவர்களின் வகுப்பேற்றத்தை ஊக்குவிக்கும் ஒன்றாகவே இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக் கழகத்திற்கு பிரவேசிக்க எதிர்பார்த்துள்ளதாக மாணவர்களுக்கு சில பாடங்கள் கட்டாயமானது என அவர் கூறியுள்ளார். கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் ஒவ்வொரு மாணவரும் வகுப்பேற்றப்படுவார்கள் என நீர்கொழும்பிலுள்ள பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்களின் பரீட்சை சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். உலகில் மிகவும் வலிமையான நாடாக கருதப்படும் அமெரிக்காவின் கல்வி கட்டமைப்பில் எந்த பொதுப்பரீட்சையும் இல்லை என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறான கட்டமைப்பை அமுல்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-5)

# மத்திய வங்கி ஆளுநரின் ஒருநாள் உணவுச் செலவு பத்தாயிரம் ரூபாவாம்!

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் 11 மாத காலத்தில் பிரத்தியேக தேவைகளுக்காக 14.5 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கடனட்டையை பயன்படுத்தி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை அவர் இவ்வாறு செலவிட்டுள்ளதாக முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கூறியுள்ளார். மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு இவ்வாறான ஒருவரை நியமிப்பீர்களா? என ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த 11 மாதகாலப்பகுதியில் பொழுதுபோக்கிற்காக அர்ஜுன மகேந்திரன் செலவிட்டதாக கூறப்படும் ஹோட்டல் பற்றுச்சீட்டுக்களை அவர் காண்பித்துள்ளார். நாளொன்றுக்கு உணவிற்காக 10 ஆயிரம் ரூபாவையும் பொழுதுபோக்கிற்காக 5 ஆயிரம் ரூபாவையும் மத்திய வங்கியின் ஆளுநர் செலவிடுவதாக விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் உள்ளக போக்குவரத்திற்கு 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் ஆடை கொள்வனவிற்காக 2 தசம் மில்லியன் ரூபாவையும் அர்ஜுன மகேந்திரன் செலவிடுவதாக அவர் கூறியுள்ளார். இவ்வாறான பொறுப்பற்ற முறைகளில் பொதுமக்களின் பணம் செலவிடப்படுமாயின் நாட்டை எவ்வாறு அபிவிருத்தி செய்வது என விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

## வெலிவிட்ட நாடுகடத்தப்பட்ட விவகாரம்

# சிங்கப்பூர் அரசுக்கு எதிராக வழக்கு தொடர ஆலோசனை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகச் செயலாளரும் யோஷித ராஜபக்ஷவின் கார்ல்டன் ஸ்போட் நெட்வேக்கின் முன்னாள் தலைவருமான ரொஹான் வெலிவிட்ட சிங்கப்பூரில் இருந்து நாடுகடத்தப்பட்டமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பில் சிந்தித்து வருவதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் நடைபெறும் கண்காட்சி ஒன்றில் பங்கேற்பதற்காக அவர் இந்த வாரத்தில் சிங்கப்பூருக்கு சென்றிருந்தார். எனினும் விமான நிலையத்தில் அவரை மூன்று மணித்தியாலங்களாக விசாரணைக்கு உட்படுத்திய சிங்கப்பூரின் குடிவரவு அதிகாரிகள். அவரை இலங்கைக்கு திருப்பியனுப்பினர்.

வெலிவிட்ட, ஏற்கனவே இலங்கையின் நீதிமன்றத்தில் கால்ட்டன் நெட்வேக் பணச்சலவை குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவராவார்.

அத்துடன் அவர் நீதிமன்ற அனுமதிபெற்றே சிங்கப்பூருக்கு சென்றார். இந்த நிலையில் அவரை நாடுகடத்தியமையானது குடிவரவு சட்டங்களை மீறிய செயலாகும்.

எனவே சிங்கப்பூர் அரசாங்கத்தின் மீது வழக்கு தொடர்வது தொடர்பாக சிந்தித்து வருவதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. (இ-5)

## வெலே சுதாவின் தாய் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஹெரோயின் பக்கற்றுகள் நான்குடன் கடந்த முதலாம் திகதி வெள்ளவத்தையில் வைத்து கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல் மன்னன் வெலே சுதாவின் தாயார் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் கல்கிஸை நீதவான் நீதிமன்றில் சந்தேகநபரை ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதவான் மொஹமட் சஹாப்தீன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி வெள்ளவத்தை பாத்தியா மாவத்தையில் வைத்து குறித்த பெண்ணை கைது செய்த போது, தான் ஹெரோயின் பக்கற்றுக்களை உபயோகிப்பதற்காகவே வைத்திருந்ததாக பொலிஸாரிடம் தெரிவித்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## காணிகளை நிரப்புதல் தொடர்பான

# எந்தவித தலையீட்டிற்கும் கீழ்ப்படிய அவசியமில்லை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் எந்த வொரு இடத்திலும் காணிகளை நிரப்புவதற்கு இடமளிக்கப் போவதில்லையென அண்மையில் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு எதிரான எந்தவித தலையீட்டிற்கும் கீழ்ப்படிய வேண்டாமென ஜனாதிபதி உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

இது தொடர்பாக நேரடி தீர்மானங்களை எடுக்கும் உத்தியோகத்தர்கள் சார்பில் தான் தெரியப்படுத்துவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இது சம்பந்தமாக ஏற்கனவே ஏதேனும் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தயக்கமின்றி தனக்கு அறியத்தருமாறு ஜனாதிபதி தெரிவித்தார். (இ-5)

# நாடு கடத்தப்பட்டார் மகிந்தவின் பேச்சாளர்

(கொழும்பு)



மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளரும், சீ.எஸ்.என் தொலைக்காட்சி சேவையின் தலைவருமான ரொஹான் வெலிவிட்ட சிங்கப்பூரில் இருந்து நாடுகடத்தப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெறும் ப்ரோட்காஸ்ட் ஏசியா கண்காட்சியில் பங்கேற்பதற்காக அவர் கடந்த செவ்வாய்க்கிழமை சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

எனினும் விமான நிலையத்தில் 3 மணித்தியாலங்களாக விசாரணைக்கு உட்படுத்திய சிங்கப்பூரின் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரை இலங்கைக்கு திருப்பியனுப்பியுள்ளனர். (இ-5)

# நகைச்சுவையானது நிதி அமைச்சு-பந்துல

நாட்டில் தற்போதுள்ள நிதி அமைச்சானது நகைச்சுவைக்குரிய ஓர் அமைச்சாக செயற்படுவதாகவும், மக்களின் மேல் அக்கறையற்று செயற்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எந்த விடயங்களும் இது வரை நடைமுறைப்படுத்தப் படவில்லை என பந்துல குணவர்த்தன குற்றம் சுமத்தினார்.

அதேநேரம் அனைத்து வங்கி நிறுவனங்களும் நாளை என்ன நடக்கும் என தெரியாமல் நம்பிக்கையின்றி வியாபாரத்தை கொண்டு செல்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (இ-5)

# பிரெஞ்ச் ஓபன் கலப்பு இரட்டையர் சானியா - பயஸ் ஜோடிகள் மோதல்




பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் சானியா மற்றும் பயஸ் ஜோடிகள் மோதுகின்றன.

கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பரீஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டிக்கு சானியா மிர்சா - லியாண்டர் பயஸ ஜோடிகள் தகுதி பெற்றன.

அரை இறுதியில் சானியா மிர்சா (இந்தியா) - இவான் டோடிக் (குரோஷியா) ஜோடி 4-6, 6-3, 12-10 என்ற செட் கணக்கில் கிறிஸ்டினா மெடேன்னோவிக் - ஹர்பர்ட் (பிரான்ஸ்) ஜோடியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

மற்றொரு அரை இறுதியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி - ஹலவக் கோவா (செக் குடியரசு) - வஸ்செலின் (பிரான்ஸ்) ஜோடியுடன் பலப்பரீட்சை நடத்தியது. இதில் பயஸ் - ஹிங்கிஸ் ஜோடி 6 - 3, 3-6, 10-7 என்ற செட் கணக்கில் வென்றது.

வெற்றி பெற்ற சானியா, பயஸ் ஜோடிகள் நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் மோதுகின்றன.

பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா - மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி விளையாடியது. 3ஆவது சுற்றில் தோல்வி அடைந்தது. கலப்பு இரட்டையர் பிரிவில் இருவரும் நேருக்கு நேர் மோதுகிறார்கள். (க)

## நல்லிணக்க உதைபந்தாட்ட காட்சிப் போட்டி இன்று

பருத்தித்துறை மற்றும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடனும் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நல்லிணக்க உதைபந்தாட்ட காட்சிப் போட்டியானது இன்று 4ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் நொற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச உதைபந்தாட்டத்தினை வளர்ப்பது மற்றும் பிரதேச வீரர்களை உற்சாகப்படுத்துவதுடன் சமூகத்தினரிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் உதைபந்தாட்ட காட்சிப் போட்டியில் யாழ்ப்பாண இராணுவ உதைபந்தாட்ட அணியினரை எதிர்த்து பருத்தித்துறை மற்றும் வடமராட்சிபிரதேசதெரிவுஅணிவிளையாடவுள்ளது.

பலரினது மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் நடைபெறவுள்ள இந்த போட்டி சுவாரஸ்யம் நிறைந்த போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்வுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் உதைபந்தாட்ட போட்டியை தொடர்ந்து இலங்கையின் முன்னணி இசைக் கலைஞர்களின் பங்குபற்றலுடன் இராணுவ இசைக் கலைஞர்கள் பெருமையுடன் வழங்கும் இசை நிகழ்வு மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க)

# இங்கி. பெண்கள் கிரிக்கெட் அணியின் கப்டனாக ஹெதர் நைட் நியமனம்



இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்த சார்லோட் எட்வர்ட்ஸ் ஓய்வு பெற்றார். இதனால் ஹெதர் நைட்டை புதிய கப்டனாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.

இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்தவர் சார்லோட் எட்வர்ட்ஸ். இவர் கடந்த மாதம் இறுதியில் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இதனால் அந்த அணியின் துணை கப்டனாக இருந்த ஹெதர் நைட் மூன்று வகை கிரிக்கெட் போட்டிக்கும் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வலது கை துடுப்பாட்டக்காரரான நைட், சுழல் பந்து வீச்சாளரும் ஆவார். இதுவரை ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும், 55 ஒருநாள் போட்டிகளிலும், 33 இருபது-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

2010-ம் ஆண்டு இங்கிலாந்து அணியில் அறிமுகமான இவர், 2014-ம் ஆண்டில் இருந்து இந்தியாவில் நடைபெற்ற இருபது-20 உலகக்கோப்பை வரை துணை கப்டனாக செயல்பட்டார். இவர் பெண்கள் பிக் பாஷ் லீக் தொடரில் ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணியின் கப்டனாகவும், இங்கிலாந்தில் நடைபெறும் பெண்கள் சுப்பர் லீக் இருபது-20 தொடரில் வெஸ்டன் ஸ்டோம் அணியின் கப்டனாகவும் செயல்பட்டுள்ளார். (க)

# அனுஷ்காவை முத்தமிட்டு வழியனுப்பிய ஹோலி




தனது காதலி அனுஷ்காவை ஹோலி முத்தமிட்டு வழியனுப்பும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் சுப்பர் ஸ்டார விராட் ஹோலி, பாலிவுட் நடிகை அனுஷ்காவை கடந்த இரண்டு ஆண்டுகளாக காதலித்து வந்தார்.

போட்டி நடைபெறும் மைதானத்துக்கு சென்று ஹோலியை உற்சாகப்படுத்துவது, வெற்றியை கொண்டாடுவது என ஜாலியாக காதலித்து வந்தனர்.

ஆனால் இடையில் என்ன ஆனதோ தெரியவில்லை. கடந்த பெப்ரவரி மாதம் இருவரும் பிரிந்து விட்டதாக தகவல்கள் வெளியானது.

இதற்கு அனுஷ்கா சுல்தான் படத்தில் நடிப்பதுதான் காரணம் என கூறப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் காதல் துளிர்விட்டுள்ளது, இருவரும் சமீபத்தில் உணவகத்திற்கு சென்று சாப்பிட்டதாக தகவல் வெளியானது.

இதற்கிடையே நேற்று முன்தினம் சுல்தான படப்பிடிப்புக்காக Budapest சென்ற அனுஷ்காவை வழியனுப்ப ஹோலி மும்மை விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

அனுஷ்காவை கட்டியணைத்து முத்தமிட்டு வழியனுப்பினார், இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாக பரவி வருகிறது. (க)

## கால்பந்து விளையாடுவதை தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது

# நீதிமன்றில் மெஸ்ஸி



ஆர்ஜெண்டினா கால்பந்தாட்ட வீரரும் பார்சிலோனா அணி வீரருமான லியோனல் மெஸ்ஸி மற்றும் அவரது தந்தை உருகுவே உள்ளிட்ட நாடுகளில் போலி நிறுவனங்களின் பெயர்களில் 4.6 மில்லியன் டொலர்கள் அளவு முறைகேடாக முதலீடு செய்து வரி மோசடி செய்ததாக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு ஸ்பெயினின் பார்சிலோனா நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு விசாரணையின் போது நேற்று முன்தினம் லியோனல் மெஸ்ஸி நீதிமன்றத்தில் ஆஜரானார்.

நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது மெஸ்ஸி, கால்பந்தாட்டத்தை தவிர தனக்கு வேறு எதுவும் குறித்து தெரியாது என குறிப்பிட்டார்.

மேலும், விளம்பர ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது தவிர தனது வங்கி கணக்கு, வரவு செலவு என அனைத்தையும் தனது தந்தை மற்றும் கணக்காளர்கள் கவனிப்பதாக அவர் தெரிவித்தார்.

தான் தனது தந்தை மற்றும் வழக்கறிஞர்களை மிகவும் நம்புவதாகவும், அதனால் வேறு எது குறித்தும் இதுவரை கேள்வி எழுப்பியதில்லை எனவும் நீதிமன்றத்தில் மெஸ்ஸி கூறினார்.

குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மெஸ்ஸி மற்றும் அவரது தந்தைக்கு 22 மாதங்கள் 15 நாட்கள் சிறை தண்டனை விதிக்க ஸ்பெயின் அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மோசடி செய்த தொகைக்கு இணையாக அபராதம் விதிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க)

# இதயம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்கள்



யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனும் தன்னிகரற்ற தன் உழைப்பால் கல்லூரியின் மாணிக்கம் பாக்கியம் தம்பதியினரின் நினைவாக எழுப்பிய நூற்றாண்டு மண்டபம், சுப்பிரமணியம் பார்வையாளர் அரங்கு, மாலதி கலையரங்கு ஆகிய சொத்துக் களை உருவாக்கித் தந்த

**சமூகஜோதி வித்தியாதான கீர்த்தி**

**அமரர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களுக்கு**

எமது கல்லூரி அன்னையின் இதயம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக சொரிந்து நிற்கின்றோம்.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், அபிவிருத்திக் குழுவினர்.**

# பழைய மாணவர் சங்க கூட்டம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் 180 ஆம் ஆண்டு நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகளின் ஒழுங்கமைப்புகள் பற்றி கலந்துரையாடுவதற்கே மேற்படி பொதுக்கூட்டம் கூட்டப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்படி பொதுக்கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் ஆ.பேரின்பநாயகம் கேட்டுள்ளார். (இ-5)


## விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அருகாமையில் வீட்டுடன் கூடிய 6 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. உடுவில் சிங்கம் ஒழுங்கை ஊடாகவும் மானிப்பாய் உடுவில் வீதி ஊடாகவும் பாதைகள் உண்டு. (4831)

தொடர்புகளுக்கு: 077 775 5175


# இதய அஞ்சலி



## உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்

மலர்வு: 28.01.1940

உதிர்வு: 02.06.2016

**அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாறாயிரம் நாட்டல்**
**அன்னையாவிலும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

என்ற வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூத்த புகழ்பூத்த பழைய மாணவனும் கல்லூரி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் கல்விச் சமூகத்திற்குமே தனது சொந்த நிதியை அள்ளிக் கொடுத்து பௌதீக வளங்களை பெற்றுக் கொடுத்தவருமான வள்ளல் சமூகப் புரவலர் வித்தியாதான கீர்த்தி மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கல்லூரிச் சமூகத்திற்குக் கிடைத்தது.

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னாரின் மறைவு கல்லூரிச் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் முழுச் சமூகத்திற்குமே பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் எல்லோருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா இறைவனடி சேர எல்லாம் வல்ல கல்லூரி குல தெய்வமான கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்க**
**நம்பிக்கை நிதியம் (யாழ்ப்பாணம்)**

(4845)

# 1 ம் ஆண்டு நன்றி செலுத்தும் வழிபாடு



நல்ல
போராட்டத்தைப்
போராடினேன்
ஓட்டத்தை
முடித்தேன்
விசுவாசத்தைக்
காத்துக்
கொண்டேன்
11 திமோதி 4:7

## திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி

அவர்களின் வாழ்க்கைக்காகவும் சேவைக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு எமது இல்லத்தில் 2016.06.04 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

**“கிருபை”**
**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.**

**திரு.ம.குட்டித்தம்பி**
**திரு. திருமதி.**
**அன்பழகன் போல்**

(சி-4787)

# இராசி பலன்

4.06.2016
(வைகாசி 22, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 11.26 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 3.05 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
அமாவாசை விரதம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, புத சுக், சந் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் பலன்தரும்.

**மேடம்:** காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், உணவில் கட்டுப்பாடு தேவை, பெரியோர் சந்திப்புண்டு.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் வந்து சேரலாம்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், புதிய தகவல்கள் வந்து சேரலாம், தாய் வழி உறவினர்களால் ஆதாயமுண்டு.

**கடகம்:** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உங்களின் செயற்பாடுகளில் உத்வேகம் காட்டுவீர்கள்.

**தனுசு:** கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், எடுத்த காரியங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**துலாம்:** மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், சில பிரச்சினைகளைக் கணடும் காணாமலும் இருப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, வழிபாட்டில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி:** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.




யாழ்.மாவட்ட தேசோதய சபை உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.சர்வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை சர்வோதய அமைப்பின் தலைவர் கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்ன தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ் செழியன் கலந்து கொண்டிருந்தார்.

# தமிழர் தேசிய கீதத்தை தமிழில் பாட வேண்டும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் தேசிய கீதத்தினை தமிழில் பாட வேண்டும் என வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.**



யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

நான் அழைத்துவரப்பட்டதன் பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனை நான் கேட்டுக்கொண்டே இருந்தேன். என்மனதில் மிக சந்தோசம் தோன்றியது அதற்கு காரணம் தேசிய கீதத்தினை தமிழில் நீங்கள் பாடியதுதான்.

தென்னிலங்கையில் நான் தேசிய கீதத்தினை சிங்கள மொழியில் கேட்டிருக்கின்றேன். ஆனால் வட பகுதியில் தேசிய கீதத்தினை தமிழில் கேட்பதற்கு எனக்கு மிக சந்தோசமாக இருக்கின்றது. ஆனால் நாம் தேசிய கீதத்தின் அர்த்தத்தினை புரிந்து அனைவரும் கீதத்தினை தமிழில் பாட வேண்டும். எதிர்வரும் காலங்களில் இதுபோன்று நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் தேசிய கீதத்தினை தமிழில் பாடவேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன்.

யுத்தத்தால் நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற பல படித்த மனிதர்கள் மீண்டும் எமது நாட்டிற்கு திரும்பி வருவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

அவர்களின் தாய் நாடு இது. இங்கு அவர்கள் வந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பது எனது விருப்பமாக இருக்கின்றது என மேலும் தெரிவித்தார். (இ-9)

## சம்பியனான மாணவிகளுக்கு காலணிகள் வழங்கப்பட்டன



யாழ்.வயாவிளான் மத்திய மகா வித்தியாலய 17 வயதுப் பிரிவு பெண்கள் கரப்பந்தாட்ட அணியினர் மாவட்ட மட்டத்தில் சம்பியனாகி மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமைக்காக பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினரால் 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியரன காலணிகள் நேற்று முன்தினம் கல்லூரி முதல்வர் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. (87)

## நெடுந்தீவில் புகைத்தலுக்கு எதிர்ப்பு




(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி பிரதேச செயலர் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது சிகரெட்டின் மாதிரிகள் எரிக்கப்பட்டதுடன விழிப்புணர்வு கொடி அணிவித்து கொடி தின நிதி சேகரிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ-5)





யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 35 ஆவது அணி மாணவர்களால் யாழ்.அச்செழு மெ.மி.த.க.பாடசாலை மாணவர்களுக்கு " ஏழை மாணவர்களின் கற்றலுக்கு உதவுவோம் " எனும் செயற்றிட்டத்தின் மூலமாக கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் க.குகதாசன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 35 ஆவது அணி சார்பாக க.றஜீவன், ப.கங்காதரன், நா.கஜீதரன், செ.சியாமிளன் ஆகியோர் பங்குபற்றி கற்றல் உபகரணங்களையும் கையளித்தனர்.

# புகைத்தல் எதிர்ப்புத் தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு ஊர்காவற்றுறையில்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகத்தின் வழிகாட்டலின் கீழ் வாழ்வின் எழுச்சி பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி.சுகந்தி குணசீலன் தலைமையில் நடைபெற்றது.





இந் நிகழ்விற்கு வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள். பாடசாலை அதிபர். மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய மாவட்ட இணைப்பாளர் கோடீஸ்வரன் மற்றும் தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப் பாட்டுச்சபையின் யாழ்.மாவட்ட உளவளத்துணையாளர் அ. எட்வின் றொஜர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

இதன் தொடர் நிகழ்வாக நேற்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கும் அப்பிரதேச மக்களுக்குமான போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

இதற்கு தேசிய அபாய ஔடதங்கள் கட்டுப் பாட்டுச்சபையின் யாழ்.மாவட்ட உளவளத்துணையாளர் மற்றும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய மாவட்ட இணைப்பாளர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

மேலும் அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாடசாலை மட்டத்திலும் கிராமமட்டத்திலும் நடத்தி அதனை குறைப்பதற்கான செயற்பாட்டில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் ஊர்காவற்றுறை வாழ்வின் எழுச்சி பிரிவும் திட்டமிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# பெண்கள் வெளிநாடு செல்வதை தடுக்க முடியாது!

## தலதா அத்துகோரள தெரிவிப்பு

(கொழும்பு)

பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பைத் தேடிச் செல்வதை தடுக்க முடியாது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் விவசாயம், கைத்தொழில் என்பவற்றின் வருமான வழிகள் சரிவடைந்துள்ள நிலையில் பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வது தவிர்க்க முடியாத ஒன்றென அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் பொருளாதார துறைக்கு அதிகம் பங்கு வகிப்பது வெளிநாட்டு வேலைவாய்ப்பாகும் என வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் அமைச்சர் தலதா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாகத்தான் வெளிநாடு செல்லும் பெண்களின் வயதெல்லையை 21 ஆகக் குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்கு ஜனாதிபதியால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சகல பெண்களும் தொழிலுக்காக வெளிநாடு சென்று பணம் உழைப்பதற்காகவே வெளிநாடு செல்லும் பெண்களின் வயதெல்லையை குறைப்பதற்கான தீர்மானத்திற்கு தான் வந்ததாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-5)

# பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை பிற்பகல் 2 மணிக்கு வல்வைநெடியகாடுதிருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

கணபதி படிப்பகத் தலைவர் பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். துன்னாலை தெற்கு அ.த.க. பாடசாலை அதிபர் தி.அரவிந்தன் பிரதம விருந்தினராககலந்து கொள்ளவுள்ளார். (இ-5)


ALREADY ISSUED 24000 CERTIFICATES

தெல்லிப்பழையில் யாழ்ப்பாணத்தில் கொழும்பில்

MICOM THE GREAT

School of Law

SINCE 1997 IN COLOMBO

1.Australian Legal System
2.Accountants in Business
3.Corporate and Business Law
4.Fundomentals of Ethics Corporate Goverence and Business Law
5.Business Law and Management
6.IBSL-Introduction To Banking and Financial Law.

Course Fee For Eaeh Course Rs- 19000.00



Conducted by

Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
L.L.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

An old Student of Honourable Prof. Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee michal - the Chief Editor of daily mirror



Contacting Numbers:
077 284 2556,
076 707 7558,
077 395 0215
Contactable person
Mr.Joganantham

(4814)

Lectured on Law at, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International

(C-3633)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 41<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BSMS /சித்த வைத்தியர்<br>தொ.இ: B/4503 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 51 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/621 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 46 செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L அரச தொழில்<br>தொ.இ: B/4504 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 48 செவ்.7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/622 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 3.75<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/4505 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 54 சூரி,செவ்.12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/3263 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 47 செவ். 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/4514 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3232 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு: 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# வவு.பொது வைத்தியசாலையில் கண்வில்லை மாற்றும் சிகிச்சை

## 500 பேர் சிகிச்சை பெற்றனர்



வவுனியா பொது வைத்தியசாலையில் இந்திய வைத்தியர்கள் மற்றும் இலங்கை வைத்தியர்கள் ஒன்றிணைந்து 500 பேருக்கு கண்வில்லை மாற்று சத்திரசிகிச்சை முகாமொன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

பிரித்தானிய புனர்வாழ்வும் புதுவாழ்வும் அமைப்பு, இலங்கை விசன் 2020, சிங்கப்பூரை சேர்ந்த விசன் மிசன், முல்லைத்தீவு ரோற்றறிக்கழகம் என்பன இணைந்து இச் சத்திர சிகிச்சை முகாமை ஒழுங்கமைத்திருந்தனர். கடந்த 30 ஆம் திகதி முதல் இன்று சனிக்கிழமை வரை நடைபெறவுள்ள இந்த சிகிச்சையில் 500 பேர் சிகிச்சை பெறவுள்ளனர்.

இதன்போது கண்வில்லை மற்றும் சத்திரசிகிச்சை அதிகளவில் இடம்பெற்றிருந்ததுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், அநுராதபுரம், இக்கிரிகொலவா, பதவியா, மதவாச்சிஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் இதன்போது உள்வாங்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டிருந்தனர்.

இலங்கையில் ஒரே தடவையில் அதிகமானவர்கள் சிகிச்சை பெறும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(2-250)

# 12 கல்வி வலயங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கொள்கை சுற்று நிருபம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பு

வடக்கு மாகாண கல்வியமைச்சிற்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கான வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான சுற்றுநிருபத்தை வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலைகளுக்கு வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அனுப்பி வைத்துள்ளார்.

சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்கள் வலயக்கல்வி அலுவலகங்கள், மாகாணக்கல்வித் திணைக்களம், மாகாணக்கல்வியமைச்சு ஆகிய மட்டங்களில் உள்ள இடமாற்ற சபையினால் பரிசீலனைக்குட்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய ஆசிரியர்கள் கடமையாற்றுகின்ற பாடசாலைகள் மற்றும் சேவைக்காலம் வரையறுக்கப்பட்டுள்ளன.

அதிக கஷ்டப்பிரதேச பாடசாலையில் ஆக்க்குறைந்தது ஐந்து வருடங்கள் கடமையாற்றியிருக்க வேண்டும்.

கஷ்டப்பிரதேச பாடசாலையில் ஆகக்குறைந்தது ஆறு வருடங்கள் கடமையாற்றியிருத்தல் வேண்டும். மிக வசதியான பாடசாலையாகில் ஆகக்குறைந்தது ஏழு வருடங்கள் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

வசதியான பாடசாலை, வசதி குறைந்த பாடசாலை ஆகியவற்றில் குறைந்தது ஆறு வருடங்கள் சேவையாற்றிய 20 பேர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கமைய இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக ஆசிரியர்கள் தமது இடமாற்ற விண்ணப்பங்களைபூரணப்படுத்திபாடசாலை அதிபர்கள் ஊடாக தாம் கடமையாற்று கின்ற வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிகதகவல்கள்தேவைப்படுவோர் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளவடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான சுற்றுநிருபத்தை பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார். (2-15)

# 50 பயனாளிகள் பங்கேற்ற ஒருநாள் தையல் பயிற்சி



மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கான வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஒரு நாள் தையல் பயிற்சி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டு சுயதொழிலிற்காக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்ட பயனாளிகளிற்கே இவ்வாறு பயிற்சி வகுப்பு முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறித்த பயிற்சி வகுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இன்றைய பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் பங்கு கொண்டிருந்தார்.

இரு மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 50 பேர் இன்றைய பயிற்சி வகுப்பில் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# தமிழர்கள் உயிர்களை இழந்தாலும் கல்வி, கலாசாரத்தை இழக்கவில்லை

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

தமிழர்கள் தங்கள் உயிர்கள், உடைமைகள் சுய பாதுகாப்பு, பூர்வீக மண் ஆகியவற்றை இழந்தனர். ஆனால் தமது கல்வி, கலாசாரம் ஆகியவற்றை இழக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வன்னி குறோஸ் கலாசாரப் பேரவை நடத்திய மாபெரும் முத்தமிழ் விழா கடந்த 28 ஆம் திகதி மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புதுக்குடியிருப்பு நகரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சாரை சாரையாக கலந்து கொண்டு தமிழ் மண்ணின் எழுச்சியை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதுவே யுத்த முடிவின் பின் தமிழன் திரண்டெழுந்த நிகழ்வு எனலாம்.

சிவப்பு, மஞ்சள் கொடிகள் வீதி எங்கும் பறக்க மைதானம் நிறைந்த மக்களுடன் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மீண்டும் ஒருமுறை சங்கமித்துள்ளது.

முத்தமிழ் விழா பதாகைகள் பழைய வரலாற்றை மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்தி நின்றது.

ஈழம் என்பதற்கு தமிழில் நீரில் இருந்து எடுக்கும் தங்கம் என்று பொருள். பாலியாற்றில் மணல் கரைகளில் இன்றும் தங்கத்துகள்கள் அடிபட்டு செல்வதை காணலாம். தமிழர்கள் தங்கள் உயிர் களை இழந்தனர். உடைமைகளை இழந்தனர், தாம் வாழ்ந்த பூர்வீக மண்ணை இழந்தனர். தமது சுய பாதுகாப்பை இழந்தனர்.ஆனால் தமது கல்வியையும், கலாசாரத்தையும் இழக்கவில்லை.

இந்நிகழ்வு தமிழனின் கலாசாரத்தையும் கலையையும் நிலைநிறுத்தும் ஒரு நிகழ்வு. கலாசாரம் என்பது ஒரு இனத்தின் அடையாளம். இன்று எமது தனித்துவத்தை தமிழன் மீண்டும் ஒருமுறை கலாசார நிகழ்வு மூலம் நிறைவேற்றியிருக்கின்றான். முள்ளி வாய்க்காலில் தமிழினத்தின் வரலாறு முடிந்துவிட்டது என கூறிய வர்களுக்கு சிவப்பு மஞ்சள் கொடிகள் மீண்டும் புதிய கதைபேசி நிற்கின்றது. அன்று அடங்காபற்றில் அரசோச்சிய தமிழன். தனது மண்ணில் கலாசார எழுச்சி மூலம் மீண்டெழுவான் என்ற எமது உரிமையை காக்கும் செய்தியை கூறி நிற்கிறான்.

போற்றுவார் போற்றட்டும். தூற்றுவார் தூற்றட்டும். முன் நடந்து செல் வன்னித் தமிழா. காத்திடு உன் கலாசாரத்தை. நிலை நிறுத்திடு உன் தமிழினத்தின் அடையாளத்தை என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தென் இந்திய திரைப்பட நடிகர் சங்க தலைவர் நாசர்.

இந்த மக்கள் வலி கண்டவர்கள். எனவே அவர்களுக்குத்தான் முடியும் சிறந்த ஈழமண் படைப்புக்களை படைப்பதற்கு. ஈழ வரலாற்றை எழுதக்கூடியவன் ஈழ மண்ணில் இருந்துதான் உருவாக வேண்டும் என்றார். (2)

# ஐயங்கன்குளம் பொதுச்சந்தை கட்டடத்தினுள் கால்நடைகள்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபையினால் நெல்சிப் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட ஐயங்கன் குளம் பொதுச்சந்தை கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீள்குடியேறியதையடுத்து முல்லைத்தீவு ஐயங்கன் குளத்தில் சுமார் 23 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பொதுச்சந்தை இன்றுவரையும் இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் கால்நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுகின்றது. குறித்த பகுதி மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சி அல்லது 15கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மல்லாவிக்கோ கொண்டு சென்று சந்தைப்படுத்த வேண்டிய நிலை காணப்படுவதுடன் தமக்குத்தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் மேற்படி பகுதிகளுக்கே செல்ல வேண்டியிருப்பதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-15)

# புதுக்குடியிருப்பு பிர.செயலர் கடமையை பொறுப்பேற்றார்

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளராக வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக (தரம்-1) கடமையாற்றிய நடராசா ஜெயராஜ் கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் செயலாற்றுமாறு வடக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அன்றையதினமே தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (2-15)






வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் சிவநகர் கிராம மக்களுக்கு நிவாரணம் வழங் கப்படாமல் எஞ்சியிருந்த மக்களுக்கு டி.ஆர்.சீ.சீ.நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் அண்மையில் சிவநகர் கிராம அலுவலரால் வழங்கி வைக்கப்பட்ட போது.... (படம்:சிவநகர் செய்தியாளர்)

# "தகைமையுடைய அனைத்து பிரஜைகளும் உள்ளடங்கிய தேருநர் இடாப்பு உருவாக்கம்"



## கிளிநொச்சியில் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் நேற்று ஊர்வலம், கருத்தரங்கு



(மல்லாவி)

கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "தகைமையுடைய அனைத்து பிரஜைகளும் உள்ளடங்கிய தேருநர் இடாப்பொன்றை உருவாக்கல்" எனும் தொனிப பொருளில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் பங்குபற்றலுடன் விழிப்புணர்வு நடைபயணம் ஒன்று நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் கனகபுரம் வீதியில் ஆரம்பிக்கப்பட்டு கூட்டுறவு சபை மண்டபம் வரை சென்றடைந்து அங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேர்தல்கள் ஆணையாளர் தலைவர் மகிந்த தேசப்பிரிய கலந்து கொண்டிருந்தார். இதன் போது உரையாற்றிய அவர் தெரிவிக்கையில்,யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி உட்பட வன்னி மாவட்டங்களில் உள்ள மாற்று திறனாளிகளின் பெயர்களை தேருநர் இடாப்பில் உள்வாங்க அதிக கவனம் செலுத்துங்கள் என குறிப்பிட்டார்.

தேருநர் இடாப்பில் அனைத்து பிரஜைகளையும் உள்வாங்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம் என தெரிவித்த அவர், குறிப்பாக இலங்கை பிரஜைகள் அனைவரையும் இடாப்பில் உள்வாங்குவதே பிரதான நோக்கம் எனத் தெரிவித்தார். மாற்றுத் திறனாளிகள், விழிப்புலனற்றோர், செவிப்புலனற்றோர் என அனைவரையும தேருநர் இடாப்பில் இணைத்துக் கொள்ள வேணடியதன் அவசியத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

மேற்குறித்தவர்கள் தேருநர் இடாப்பில் இணைக்கப்படுவதற்கான முழுமையான முயற்சியாக இத்திட்டம் அமைய வேண்டும் . குறிப்பாக கிளிநொச்சி உட்பட வன்னி மாவட்டங்களில் அதகளவானோர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மாற்றுத் திறனாளிகளாக்கப் பட்டுள்ளனர். அவர்களை முழுமையாக தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்கு அரச அதிகாரிகள் முழுமூச்சுடன் செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோளை அவர் விடுத்திருந்தார்.

எதிர்காலத்தில் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப் படாதவர்கள் இல்லாதவாறு முழுமைப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பினை தயாரிப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹமட், எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி தவலிங்கம்,தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரத்னஜீவன் கூல், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்சி. அமல்ராஜ் உள்ளிட்ட பிரதேச செயலாளர்கள்,கிராம அலுவலர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.(2-15-312)




# தேசிய உணவு உற்பத்தி திட்டத்திற்கு கைகொடுக்கும் வகையில் விவசாய நடவடிக்கை அமைய வேண்டும்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு



(குருமன்காடு)

ஜனாதிபதி தேசிய உணவு உற்பத்தி திட்டமொன்றினை செயற்படுத்தி வருகின்றார். அந்த திட்டத்திற்கு கைகொடுக்கும் முகமாக எமது விவசாய நடவடிக்கைகள் அமைய வேண்டும்எனவடக்குமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தை சேர்ந்த விவசாய இளைஞர் கழகங்களுக்குவடக்குமாகாண விவசாய அமைச்சினால் விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று வவுனியா விவசாய பண்ணையில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வழங்கப்பட்ட இவ் விவசாய உபகரணத் தொகுதியில் நவீன முறையில் நாற்று நடும் இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்களும் வழங்கிவைக்கப்பட்டிருந்தன. வவுனியா விவசாய பண்ணையில் இடம பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர்பொ.ஐங்கரநேசன்,விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக்ரஞ்சன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.தியாகராசா, ஆர். இந்திரராஜா, அ. ஜெயதிலக உட்பட விவசாய அமைச்சின் அதிகாரிகள், விவசாய இளைஞர் கழகத்தின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது விவசாய அமைச்சர் தெரிவிக்கையில,

134 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன. ஒட்டுமொத்தமாக வடக்கு மாகாணத்திற்கென மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியாக 410 மில்லியன் ரூபா மட்டுமே. இத்தொகை விவசாய அமைச்சுக்கு மாத்திரமல்ல. இந்நிதியை ஐந்து மாவட்டங்களுக்கும் பிரித்தல் வேண்டும். ஐந்து மாவட்டங்களிலும் இருக்கக் கூடிய அத்தனை திணைக்களங்களுக்கும் பிரிக்கவேண்டும். எனவே இந் நிதியில் 240 மில்லியனை விவசாய திணைககளத்திற்கு ஒதுக்கீடு செய்து அதில் 40 மில்லியன் ரூபாவை வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளோம்.

வடக்கு மாகாணசபை எதனையுமே செய்வதில்லை என்று சொல்லி அரசியல் நோக்கம் கருதி செய்யப்படும் விமர்சனங்களுக்கும் நாங்கள் பதில்சொல்ல வேணடியவர்களாக இருக்கின்றோம். பிச்சை எடுக்கப்படுகின்ற இந்த மிகக் குறைந்தளவிலான பணத்தை வைத்தே நாங்கள் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வடக்குமாகாணத்தைபொறுத்தவரையில் நெல் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு என 2016 ஆம் ஆண்டு விவசாய திணைக்களத்தினூடாக முன்னெடுத்து வருகின்றோம். நெல் உற்பத்தி திறனை அதிகரிக்க செய்யும் திட்டத்திற்கு ஐந்து மாவட்டத்திற்கும் 19 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிலேயே இவ் உபகரணமும் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி கூட தேசிய உணவு உற்பத்தி திட்டமொன்றினை செயற்படுத்தி வருகின்றார். மானசீகமாக மனப்பூர்வமாக அவர் இந்த திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றார். எனவே அந்த திட்டத்திற்கும் கைகொடுக்கும் முகமாக எமது விவசாய நடவடிககைகள் அமைய வேணடும். அதற்கு அமைவாகவே எனது திணைக்களமும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது என தெரிவித்தார். (2-250)

# இ.போ.ச.பேருந்தின் மீது மர்ம நபர்களால் கல்வீச்சு சாரதி வைத்தியசாலையில்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை பேருந்தின் மீது பளையில் வைத்து இனந் தெரியாதவர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தியதில் சாரதி பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவது, கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தின் மீது பளை தர்மக்கேணி சந்தியில் வைத்து நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்கள் இருவர் கல்வீசித்தாக்குதல் நடத்தினர். இதனால் பேருந்தின் முன் கண்ணாடி உடைந்து சாரதியின் முகத்தில் வெட்டியதால் பேருந்தின் சாரதி காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

# வவுனியாவில் வீட்டின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தில் வீடு ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் பெற்றோல் குண்டு வீச்சு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கறுப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத மூன்று நபர்கள், குறிப்பிட்ட வீட்டின் மீது பெற்றோல் குண்டை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. இதன் காரணமாக எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா

நாக வழிபாட்டின் பிரசித்தி பெற்ற தலமான புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு விசேட அபிஷேக வழிபாடுகள் இடம்பெற்று நேர்த்திக்கடன்களை செலுத்தும் முகமாக பக்தர்களால் பால் காவடி, செடில் காவடி, பறவைக்காவடி, தீ மிதித்தல் உட்பட பல நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

அன்று மாலை 5 மணிக்கு விசேட பூசைகள் இடம் பெற்று நாகதம்பிரானின் வீதியுலா இடம்பெறும்.

மறுநாள் அதிகாலை பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

ஆலயத்திற்குவருகைதரும் பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு ஒழுங்குகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (2-15)

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் மரநடுகை, சிரமதானம்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வியமைச்சின் அனுசரணையுடன் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண் பாடசாலைகளில் "உலக சுற்றுச்சூழல் தினம்" நாளை ஞாயிற்றுக் கிழமை "சட்டவிரோத வன உயிர் வர்த்தகத்திற்கு எதிராக எழுவோம் " எனும் தொனிப் பொருளில் அனுஷ்டிக்கப்படும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையினால் ஆண்டுதோறும் ஜுன் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனையொட்டி நாட்டிலும் சட்டவிரோத வன உயிர்களை அழித்தலையும் வன வளத்தை அழித்தலையும் எதிர்த்து ஜனாதிபதியின் ஆலோசனைக்கு இணங்க நடப்பாண்டில் இருந்து மே மாதம் 30ஆம் திகதி தொடக்கம் ஜுன் மாதம் 5ஆம் திகதி வரை தேசிய சுற்றுச்சூழல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மே மாதம் 30ஆம் திகதி தொடக்கம் ஜுன் 5ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய சுற்றுச்சூழல் வாரமாக கடைப் பிடிக்கப்பட்டு இறுதி நாளான நாளைய தினம் இத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலைச் சுற்றாடலை வளப்படுத்தும் நோக்குடன் மரநடுகை, சிரமதானம், சேதனத் தோட்டச் செய்கை போன்ற சூழல்சார் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு அவர் அறிவித்துள்ளார். மேலதிக தகவல்கள் தேவைப்படின் 021 221 1264 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# ஆஸிக்கு தப்பிச் செல்ல முயன்ற 33 இலங்கை அகதிகள் கைது

## தமிழக பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

**தமிழ்நாடு, பழவேற்காடு, திருக்கழுகுன்றம் பகுதிகளில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு தப்ப முயன்ற 33 இலங்கை அகதிகளை பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளனர்.**

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, புழல் மற்றும் வேலூர் பகுதிகளில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களைச் சேர்ந்த சிலர் அவுஸ் திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயல்வதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து பொன்னேரி- பழவேற்காடு சாலையில் போலாட்சியம்மன் கோயில் குளம் அருகே அமைந்துள்ள சோதனைச் சாவடியில் திருப்பாலைவனம் பொலிஸார் கடந்த புதன்கிழமை நள்ளிரவு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியாக வந்த பேருந்தை மடக்கி சோதனையிட்டனர். அதில் 18 பேர் இருந்தனர். விசாரணையில் அவர்கள் அனைவரும் கும்மிடிப்பூண்டி, வேலூர், பவானிசாகர் பகுதிகளில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிப்பவர்கள் எனத் தெரிய வந்தது.

அனைவரும் பழவேற்காடு சென்று, அங்கிருந்து கப்பல் மூலம் அவுஸ்தி ரேலியாவுக்குச் செல்ல இருந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அகதிகளை ஏற்றிவந்த பேருந்தை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

மேலும் அகதிகளை திருப்பாலைவனம் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இதேபோன்று சென்னை- கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் ஜனப்பச்சத்திரம் கூட்டுச் சாலை சந்திப்பில் சோழவரம் பொலிஸார் நடத்திய வாகனச் சோதனையில் ஒரு பேருந்தில் வேலூர், புழல் பகுதியைச் இலங்கை அகதிகள் 10 பேர் இருந்ததையடுத்து அந்த வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

அதில் இருந்த 10 பேரிடமும் சோழவரம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தை அடுத்த பெருமாள்சேரியில் இலங்கை அகதிகள் தொடர்பாக மாமல்லபுரம் டி.எஸ்.பி. சேகருக்கு பொதுமக்கள் அளித்த தகவலையடுத்து சதுரங்கப் பட்டிணம் பொலிஸார் அங்கு சென்று சில வீடுகளை சோதனையிட்டனர்.

பொலிஸார் வருவதை அறிந்த 5 அகதிகள் தப்பினர். கௌரிதரன் (26), ஜீவிதன் (18), ஜெயசுந்தர்ராஜன் (45), சசிதரன் (34), பிரதீபன் (29) ஆகிய 5 பேர் மட்டும் பொலிஸாரிடம் சிக்கினர். விசாரணையில் இவர்கள் தமிழகத்தில் உள்ள பல்வேறு அகதிகள் முகாம்களில் இருந்து இங்கு அழைத்து வரப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இவர்கள் மாமல்லபுரத்தில் இருந்து படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. இவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-5)



## அமைச்சர் ராஜிதவின் குடும்பத்தை கடுமையாக சாடும் நீதி அமைச்சர்

### வைத்தியர்களை அவமதிப்பதை ஏற்க முடியாது



சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் குடும்பத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கடுமையாக சாடியுள்ளார். குறைந்த வசதிகளுடன் ஆசியாவின் மிகச் சிறந்த சேவைகளை வழங்கி வரும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் வைத்தியர்களை சில அரசியல்வாதிகள் தூற்றுவது மிகவும் இழிவான ஓர் செயலாகும் என அவர் தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் அவர் இதனைத்தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியர்களை இழிவுபடுத்தும் வகையிலான கருத்துக்கள் வெளியிடுவதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்த கருத்துக்கள் அரசாங்கத்தின் நிலைப்பாடாக ஒருநாளும் அமையாது.

வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மரியாதை செலுத்துகின்றோம். அவர்களின் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது.

சில சில குறைபாடுகள் காணப்பட்டாலும்ஒட்டு மொத்த அடிப்படையில் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

சில விடயங்கள் தொடர்பில் வைத்தியர்களுடன் முரண்பாடுகள் ஏற்படக்கூடும். எனினும் அவற்றை மதிநுட்பமான வகையில் தீர்த்துக் கொள்வதே அரசாங்கம் என்ற ரீதியில் செய்ய வேண்டிய காரியமாகும். எந்தவொரு நிலைப்பாட்டையும் கொண்டிருக்க மக்களுக்கு உரிமையுண்டு. சங்கம் என்ற ரீதியில் ஒருநிலைப்பாட்டைக் கொண்டிருப்பதனால் அவர்களை இழிவுபடுத்தி கண்டிக்கும் வகையில் கருத்து வெளியிடுவது நல்லாட்சி அரசாங்கத்திற்கு பொருத்தமாகாது.

வைத்தியர்கள் போன்ற கல்வி அறிவில் உயர்ந்தவர்களை இழிவுபடுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான செயற்பாடுகளினால் அரசாங்கமே நெருக்கடிகளை எதிர்நோக்கியது.

இந்த செயற்பாடுகள் எமக்கும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்க புத்தி ஜீவிகள் என்ற வகையில் வைத்தியர்கள் முக்கிய பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் வைத்தியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தனை மறந்து விட முடியாது என விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும் அவரது மகன் சதுர சேனாரட்னவும் வைத்தியர்களையும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரையும் கடுமையாக அண்மையில் சாடியிருந்தமையை கண்டிக்கும் வகையில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இதனைத்தெரிவித்துள்ளார்.(இ-5)

## 2017இல் 24 நாட்கள் பொது விடுமுறை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தகவல்

2017ஆம் ஆண்டுக்கான அரசாங்க மற்றும் வங்கி விடுமுறைத் தினங்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சு, கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ளது. இதனடிப்படையில், 2017ஆம் ஆண்டில், 24 நாட்கள் மாத்திரமே பொது விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் வருடம் ஒன்றுக்கு பொது விடுமுறை நாட்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இதனால், பொருளாதாரம் பாதிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆசிய நாடுகளில், இலங்கையிலேயே வருடம் ஒன்றுக்கு அதிக விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. சிங்கப்பூரில் 13 நாட்களும் ஜப்பானில் 17 நாட்களும் இந்தோனேஷியாவில் 19 நாட்களும், தாய்லாந்தில் 20 நாட்களும் மாத்திரமே பொது விடுமுறை தினங்களாகக் காணப்படுகின்றன.

அத்துடன், அமெரிக்காவில் 9 நாட்களும் அவுஸ்திரேலியாவில் 10 நாட்கள் மாத்திரமே பொது விடுமுறைகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2017 இல் 24 விடுமுறை தினங்கள்




## கடலட்டைகளுடன் சீனப்பிரஜை கைது

கடலட்டைகளுடன் சீனப் பிரஜை ஒருவர் அநுராதபுரத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபரை கைது செய்ததாகவும், இவரிடமிருந்து 12 கிலோ கடலட்டைகள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் குறித்த கடலட்டைகளை மன்னார் பிரதேசத்திலிருந்து பெற்றுக்கொண்டதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சீனப் பிரஜை கொழும்பு-கொள்ளுப்பிட்டி பகுதிவிடுதி ஒன்றில் பணிபுரியும் 24 வயதானவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 75

## காலநிலைக்கேற்ற துணிச்சலான விவசாயம்!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

முன்னொருகாலமும் எதிர்பார்த்திராதவாறு உலகளாவிய ரீதியில் காலநிலையில் மாற்றங்களை அனைத்து நாடுகளும் பரந்து பட்ட அளவில் உணரத் தொடங்கியிருக்கின்றன. இந்த நிலை எம்மைப் பொறுத்த வகையில் மிகவும் முக்கியமானதாகும். இயற்கையின் விபரீதமென சுருக்கமாக நாம் குறைப்பட்டுக் கொண்டாலும் இன்னும் அலட்டிக் கொண்டாலும் இந்த விபரீதத்திற்கான காரணத்தை நாம் முழுமையாக புரிந்து கொள்ளவும் அதன்மூலம் இம்மாற்றத்தின் விளைவுகளை விவசாயத்திற்கு அனுசரணையானதாக மாற்றிடவும் வேண்டும். இல்லாது போனால் இம்மாற்றத்தின் எதிர்த்தாக்கத்தினை நாம் அனுபவிக்க வேண்டியிருக்கும். காலநிலை சடுதியாக மாறுகின்றது போல தோற்றமளித்தாலும் இது ஆண்டாண்டு காலமாக படிப்படியாக ஏற்பட்ட மாற்றமாகவே இருக்கின்றது. இதனை நாம் ஆரம்ப காலங்களில் பெரிதுபடுத்தியிருக்கவில்லை. ஆனால் தற்போது அதனது தாக்கம் அழிவுகளை ஏற்படுத்தும் போது அதனை எம்மவர்கள் உணரத்தலைப்படும் போது காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் கண்ணால் காணக்கூடியதாயிருக்கின்றது. அழிவுகளும் எல்லைமீறி உயிரிழப்புக்களையும் சொத்துக்களுக்கு நாசத்தையும் செய்திருக்கின்றது.

அண்மையில் எமது நாட்டில் பெய்த கனமழையும் அதனால் பலஉயிரிழப்புக்கள் நிகழ்ந்ததையும் பார்த்தும் கேட்டபோது அனைவரினதும் மனம் பதைபதைத்தது உண்மையே. உயிரிழப்புக்கள் எந்த வகையாயினும் தவிர்க்கபட வேண்டியனவையே. கனமழையினால் மண்சரிவேற்பட்டு மண்ணுக்குள் புதையுண்டவர்களின் சோகக்கதைககள் மனதை நெருடுவதாகவே இருக்கின்றது. பெய்த மழை வெள்ளம் பாய இடமின்றியும் பாயும் பாதை தடைப்பட்டும் போன காரணத்தால் வெள்ளமாகி பல இடங்களில் வீடுகளுக்குள் புகுந்து நாசஞ் செய்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தை 2008 இல் வெள்ளத்தினுள் அமிழ்த்திய நிசா புயல் செய்த அழிவுகளைப்போல கொழும்பில் இம்முறை இந்த அவலம் நடந்திருக்கின்றது. பலரது வீடுகள் வெள்ளத்தினுள் அமிழ்ந்து போய் தற்போது தண்ணீர் வடியும் போது வந்து சேர்ந்த குப்பைகளை அகற்றுவதே பெரும்பாடாகியிருக்கின்றது. வீடுகளில் பயன்பாட்டில் இருந்த பொருட்களனைத்தும் வெள்ளம் இழுத்து வந்து குப்பைகளாக மாற்றியிருக்கின்றது. இந்த குப்பைகளை அகற்றுவதில் மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கின்றது. படித்த கல்விமான் ஒருவர் இந்த வெள்ள அவலத்தினுள் அகப்பட்டு தற்காலிகமாக இடம்பெயர்ந்ததை கூறி தற்போது தான் இடப்பெயர்வின் தாக்கத்தை தான் அனுபவமூடாக உணர்ந்ததாகவும் நண்பரின் வீட்டில் தங்கியிருந்ததாகவும் கூறியபோது இங்கு நடந்த இடப்பெயர்வும் அதன்பின்னரான உயிரிழப்புக்கள், உடைமைகளின் சேதம் என்பனவற்றை தாம் உணரக் கூடியதாகவும் கூறினார். இயற்கை சிலவேளைகளில் பலருக்கு துன்பத்தையும் சிலருக்கு படிப்பினையையும் தந்துவிடுகின்றதனை காணலாம். இதுவும் இயற்கையின் திருவிளையாட்டல்லவா.

காலநிலை மாற்றமடையும் போது அதற்கேற்றதான துணிச்சலான விவசாயத்தை (Climate Smart Agriculture) நாம் செய்ய முயற்சிக்க வேண்டும். இல்லாது விட்டால் காலநிலை மாற்றத்தின் அழிவுக்குள் நாமாகவே சிக்கிவிடுவோம். உலக உணவு ஸ்தாபனத்தின் இவ்வாண்டுக்கான கருவாக காலநிலைக்கேற்ற துணிச்சலான விவசாயத்தை ஆக்கி அதனை மையப்படுத்திய செயற்பாடுகளை பலநாடுகளில் முடுக்கிவிட்டிருக்கின்றார்கள். அந்தவகையில் விவசாய பீடத்தின் இவ்வருட உலகளாவிய ஆராய்ச்சி மாநாட்டின் கருப்பொருளாக "காலநிலைக்கேற்ற துணிச்சலான விவசாயத்தை" தெரிவு செயது அதற்கு முன்னுரிமை கொடுத்திருப்பது காலத்திற்கேற்ற செயலாக எண்ணலாம். ஆனால் இந்த கருத்தினை மையப்படுத்திய நிகழ்வுகளுக்கு மாநாட்டின் ஒழுங்கமைப்புக்குழு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆய்வுக்கட்டுரைகளிலும் இக்கருப்பொருள் சார்ந்தவைகளுக்கு தனியிடம் கொடுக்கலாம். இவ்வருட கடைசியில் இவ்வாய்வு மாநாடு கிளிநொச்சியில் அறிவியல் நகரில் நடைபெறவிருக்கின்றது.

'காலநிலைக்கேற்றவாறு உணவுற்பத்தியையும் விவசாயத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்பது உலக உணவு ஸ்தாபனத்தின் இவ்வருட உலக உணவு தினத்திற்கான குறிப்பொருள் ஆகும். இதன்படி ஏழு விடயங்களில் நாம் கரிசனை செலுத்தவேண்டியிருக்கின்றது. முதலாவதாக கால்நடைகளானவை உலகளாவிய ரீதியில் இரண்டில் மூன்று பங்கு விவசாயத்தாலுருவாகும் பச்சைவீட்டு வாயுக்களை வெளியேற்றுகின்றதுடன் 78சதவீதமான விவசாயத்திலிருந்தான மெதேன் வாயுவை வெளியேற்றுகின்றது. இதனால் கால்நடை வளர்ப்பினை நாம் எமக்கு தேவையானளவிற்கு பயன்படுத்துவதோடு பச்சைவீட்டு வாயுவை வெளியேற்றுவதை குறைப்பதற்கான வழிகளைக் கண்டுபிடித்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக காலநிலை மாற்றத்தின் தாக்கத்தினால் இயற்கையாக கிடைக்கும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். அதில் முக்கிய வளங்களான நீர், மண் என்பன வளமானதாக கிடைக்கக்கூடியதாக பாதுகாதது்கொள்ளவேண்டும் மண்ணை வளமானதாக வைத்திருப்பது எந்த இடர்வரினும் அதிலிருந்து சராசரியான விளைச்சலைப் பெறக்கூடியதாக இருக்கும். இதில் நீர் முகாமைத்துவம் என்பது முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

மூன்றாவதாக உலக உணவு ஸ்தாபனத்தின் கணக்கீட்டின் படி 2050ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகைக்கு உணவூட்ட உற்பத்தியை 60 சதவீதத்தினால் அதிகரிக்கவேண்டியிருக்கும். அப்படிப்பார்த்தாலும் தற்போதைய உற்பத்தியையே காப்பாற்ற முடியாது திண்டாடும் நாங்கள் எப்படி 60 சதவீதத்தினால் அதிகரிக்க முடியும் என தோன்றுகின்றதல்லவா. இதற்காகத்தான் காலநிலைக்கேற்றவாறான துணிச்சலான விவசாய நடைமுறைகளுக்குள் நாம் உள்வாங்கப்படல் வேண்டும். இந்த மாற்றம காலவோட்டத்தை வைத்து பார்க்கும் போது மிகவும் அவசியமானதாகும்.

நான்காவதாக உலக உணவு உற்பத்தியில் ஒன்றில் மூன்று பங்கு உணவு விரயமாக்கப்படுகி ன்றது. இது மிகவும் முக்கியமான விடயமாகும். உணவுஉற்பத்தியை அதிகரிக்க திண்டாடும் நாங்கள் உற்பத்தி செய்யப்பட்ட உணவை, பாதுகாக்க முடியாது, சிறப்பாக சேமிக்க முடியாது, விரயஞ்செய்கின்றோம் எனில் இந்த இழப்பை எந்தவகையில் ஈடுசெய்வது? கிட்டத்தட்ட வருடமொன்றுக்கு 1.3 பில்லியன் தொன் உணவு விரயமாக்கப்படுகின்றது. ஒருபக்கம் பட்டினியால் இறக்கும் மக்கள் இன்னொருபக்கம், உண்ண நிறைவான உணவின்றி நோய்வாய்ப்படும் மக்கள் மறுபக்கம் உணவை விரயமாக்கும் மக்கள். இவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஏற்பட்டு அனைவருக்கும் உணவு கிடைக்க செய்யும் அதே நேரத்தில் உணவினை விரயமாக்காது பாதுகாக்கவும் வேண்டும.

ஐந்தாவதாக தற்போது பிடிக்கப்படும் மீன்வகைகளில் 2050 ஆம் ஆண்டளவில் தட்பவெப்ப பிரதேசங்களில் 40சதவீதமாக குறைவடைந்துவிடும் என்பதாகும். இந்த வகையில் பார்த்தால் மீன் உணவு நலிவடையும் என்பது நல்லதொரு செய்தியல்ல. மீன் உணவிலேயே உணவு பாதுகாப்பு, உணவு ஊட்டச்சத்து மற்றும் நிறையுணவு என்பன தங்கியிருப்பதோடு அது பலருடைய வாழ்வாதாரமாகவும் இருக்கின்றது. எனவே கடல் வளத்தை பாதுகாக்கும் திட்டங்கள் விரைந்து எடுக்கப்பட வேண்டும். சேது சமுத்திரத்திட்டத்தின் எதிர் விளைவுகளிலொன்றாக மீன்கள் பெருகும் பாறைகளின் அழிவு எடுத்துரைக்கப்பட்டது அனைவருக்கும் நினைவிருக்கலாம். நல்லவேளையாக சேது சமுத்திரத்திட்டத்தின் பங்காளிகள் தமிழகத்தில் ஆட்சியதிகாரத்திற்கு வராத காரணத்தினால் அந்த சுண்ணாம்பு பாறைகள் பாதுகாக்கப்படும் என நாம் நம்பலாம்.

ஆறாவதாக வனஅழிப்பும் வனங்களின் பல்வகைத்தன்மையின் இழப்புமாகும். வனங்கள் பல்வகைத்தன்மையின் சிறந்த இருப்பிடமாகும். அதிலும் வனங்களின் மூலமே மழைவீழ்ச்சி நிர்ணயிக்கப்படுகின்றது. மரங்களை அழித்ததன் விளைவை பல இடங்களில் நாம் உணரத்தலைப்பட்டிருக்கும் நேரத்தில் வனங்களை பாதுகாத்தலும் வேளாண்காடுகளை உருவாக்குதலும் முதலிடம் பெறுகின்றது. ஆட்சியதிகாரத்திலிருப்பவர்கள் திட்டமிடலில் கவனஞ்செலுத்துவோரின் திட்டங்களுக்குள் வனத்தை மீளக் கட்டியெழுப்புதல் அவசியமாக கருதப்படவேண்டியதாகும். வன மீளமைத்தல் திட்டத்திற்கு அனைத்து மக்களின் ஆதரவும் திரட்டி இதை ஒரு மக்கள் இயக்கமாக இயற்கையை நாம் அனுசரிப்பதற்கு கிடைக்கும் அரிய வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண் டும்.

ஏழாவதாக உலகம் 2030 ஆம் ஆண்டளவில் பட்டினியை முற்றுமுழுதாக ஒழிப்பதென கங்கணங்கட்டியிருக்கின்றது என்றால் நாம் அனைவரும் அதில் பங்காளிகள். பட்டினியை ஒழிப்பதற்கான செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்து உணவுற்பததியைக் கூட்டி அதிலும் நிறையுணவை கிடைக்கச்செய்து நலிந்த மக்களை மீட்டெடுக்கும் பொறுப்பினைக் கொண்டது. நாம் அனைவரும் இதில் பங்கு கொண்டு பட்டினியை ஒழிப்பதற்கு பாடுபட வேண்டும். தனிப்பட்ட ஒருவரின் செயலே பலவிடயங்களுக்கு ஆறுதலாகவும் பங்களிப்பாகவும் இருப்பதனால் இந்த அரிய நிகழ்வில் அனைவரும் பங்குபற்றுவோம். உணவுற்பத்தியை இயற்கையை அனுசரித்து அதிகரிக்கும் அதே நேரத்தில் இயற்கைக்கு மாறான விடயங்களை நாம் செய்வதனையும் தவிர்த்துக்கொள்ள திடசங்கற்பம் கொள்வோம். சொல்வதைவிட செய்வதற்கு அனைவரும் வேண்டும். வாருங்கள் இனியொரு பசுமைப் புரட்சி இந்த விடயங்களையே சுட்டி நிற்கின்றது.



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 92

# 100 ஆண்டுகளில் இல்லாத கடும் மழையால் வெள்ளத்தில் மிதக்கிறது பிரான்ஸ், ஜேர்மனி






(பாரிஸ்)

**பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரியாவில் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத வகையில் கனமழை பெய்து வருகிறது. இதனால் பாரிஸ் உள்ளிட்ட நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. மழை காரணமாக ஜேர்மனியில் 8 பேரும் பிரான்ஸில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடு, உடைமைகளை இழந்துள்ளனர்.**

ஒரு வாரமாக மழை

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் மற்றும் அந்த நாட்டின் மத்திய, தென்கிழக்கு பகுதிகளில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்து வருகிறது.

பாரிஸில் ஓடும் ஸீன் நதியின் இருபுறமும் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. சில இடங்களில் உடைப்பு ஏற்பட்டு நகருக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

மத்திய பிரான்ஸில் உள்ள சோப்பீஸ் சர்லோயிங் நகரில் கனமழை பெய்து வருகிறது. அங்கு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர தங்களை காப்பாற்றக் கோரி தொலைபேசியில் உதவி கோரியுள்ளனர். அந்தப் பகுதிகளில் ஹெலிகொப்டர்கள், படகுகள் மூலம் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்து பாரிஸ் வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் பெய்துள்ளது.

கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத வகையில் பிரான்ஸில் கனமழை பெய்தது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மானுவேல் வால்ஸ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரில் ஆய்வு செய்து நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தி வருகிறார்.

**ஜேர்மனியில் 8 பேர் பனி**

ஜேர்மனியின் கிழக்குப் பகுதியில் ஒரு வாரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்து வருகிறது. முனிச் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

பவேரியா மாகாணத்தில் வெள்ள பாதிப்பு அதிகமாக உள்ளது. அந்த மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் 10 அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்ந்தோடுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் தரைத்தளங்களை விட்டு வெளியேறி மாடிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மழை காரணமாக ஜேர்மனியில் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலரை காணவில்லை. அடுத்த சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுத்திருப்பதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். பவேரியா மாகாணம் முழுவதும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல ஆஸ்திரியாவின் சால்ஸ்பர்க் பிராந்தியத்திலும் பலத்த மழை பெய்து வருகிறது. (இ-5)





## இம்ஜா ஏரியின் நீர்மட்டத்தை குறைக்கும் பணியில் நேபாளம்



(காத்மண்டு)

எவரெஸ்ட் சிகரத்தில் உள்ள இம்ஜா ஏரியின் நீர்மட்டத்தை குறைக்கும் பணியில் நேபாள அரசு ஈடுபட்டு வருகிறது.

கடல் மட்டத்தில் இருந்து சுமார் 5010 மீற்றர் உயரத்தில் உள்ளது இம்ஜா ஏரி. இந்த ஏரியில் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் ஏரியின் கரை உடையக்கூடும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்ததையொட்டி இந்த ஏரியின் நீர்மட்டத்தை குறைக்கும் பணியில் நேபாள இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஏரியின் கரை உடைந்தால் ஷெர்பா குடியிருப்புகள், மலையேறும் பாதைகள், பிற உள்கட்டுமான வசதிகள் அனைத்திற்கும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

அடுத்த சில மாதங்களில் இந்த ஏரியின் நீர்மட்டம் மூன்று மீற்றர் குறைக்கப்படும் என்று நேபாள படையின் செய்தியாளர் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

## ஆந்திராவில் துயரம்

## பாம்பு கடித்த பெண்ணும் பால் குடித்த குழந்தையும் பலி

இந்தியாவின் ஆந்திர மாநிலம் அனந்தபுரம் மாவட்டம் காந்திநகர் கிராமத்தை சேர்ந்தவர் லிங்கண்ணா.

இவரது மனைவி சந்திரகலா (வயது-30) மாடு மேய்த்து பால் கறந்து பிழைப்பு நடத்தி வந்தார்.

இவர்களுக்கு ஒரு வயதில் வம்சி என்ற குழந்தை இருந்தது.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் சந்திரகலா மாட்டு தொழுவத்தில் பால் கறந்தார்.

அப்போது அவரை பாம்பு கடித்தது. ஆனால் இருட்டில் ஏதோ பூச்சி கடித்திருக்கும் என்று கருதிய சந்திரகலா அதை பெரிதாக நினைக்கவில்லை.

ஆனால் கால் வலித்துக் கொண்டே இருந்தது.

இதற்கிடையே சந்திரகலாவின் குழந்தை வம்சி பசியால் அழுதது.

உடனே சந்திரகலா கால் வலியை பொறுத்துக் கொண்டு குழந்தைக்கு பால் கொடுத்தார்.

அதற்குள் பாம்பு கடித்த விஷம் தாய்ப்பாலில் ஏறியிருந்தது. பாலை குடித்த குழந்தை வம்சியின் வாயில் இருந்து நுரைதள்ளியது.

இதைப் பார்த்த சந்திரகலா அதிர்ச்சி அடைந்தார்.

இதற்கிடையே அவரது உடல்முழுவதும் விஷம் பரவி வாயில் இருந்தும் நுரை தள்ளியது.

இதையடுத்து தாய்-குழந்தை இருவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் செல்லும் வழியிலேயே சந்திரகலாவும், குழந்தை வம்சியும் பரிதாபமாக உயிரிழந்தனர். (இ-5)

## இந்தோனேசியாவில் பாரிய நிலநடுக்கம் கட்டடங்கள் பல இடிந்தன; பலர் படுகாயம்



(படாங்)

ஆசிய நாடுகளில் ஒன்றான இந்தோனேசியா புவி தட்டுகள் அடிக்கடி நகருகிற இடத்தில் அமைந்து உள்ளதால் அங்கு நிலநடுக்கம் மற்றும் எரிமலை சீற்றம் ஏற்படுவது வாடிக்கையான சம்பவம் ஆகிவிட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலையில் சுமத்ரா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 6.5 புள்ளிகளாக பதிவானது. இந்த நிலநடுக்கம் சுமத்ரா தீவில் இருந்து 150 கி.மீ தொலைவில் உள்ள படாங் நகரில் 50 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

சுமார் 30 விநாடிகள் நீடித்த நிலநடுக்கத்தால் வீடுகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின.

படாங் நகர் பகுதிகளில் 54 வீடுகளும், ஒரு வைத்திய சாலையும் இடிந்து விழுந்து சேதம் அடைந்தன. இடிபாடுகளில் சிக்கி பலர் படுகாயம் அடைந்தனர்.

படாங் நகரில் நிலநடுக்கத்தை தொடர்ந்து 80 வயது முதியவர் ஒருவர் மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியபோது பீதி அடைந்த மக்கள் அலறி அடிதுக்கொண்டு வீடுகளையும்பிற கட்டடங்களையும் விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தீவிரவாத கண்காணிப்பு தகவல் பரிமாற்றம்

# இந்தியா - அமெரிக்கா இடையே ஒப்பந்தம்

(டில்லி)

தீவிரவாதிகள் பற்றிய கண்காணிப்பு தகவலை பரிமாறிக் கொள்ள இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே உயர் அதிகாரிகள் மட்ட அளவில் நேற்று முன்தினம் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியா சார்பில் மத்திய உள்துறை செயலாளர் ராஜீவ் மகரிஷியும், அமெரிக்கா சார்பில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் ரிச்சர்டு ராகுல் வர்மாவும் கையெழுத்திட்டனர். இதன் மூலம் இரு நாடுகளும் சட்டவிதிக்குட்பட்டு தீவிரவாதிகள் பற்றிய கண் காணிப்பு தகவலை தங்கள் இருப்பிடத்தில் இருந்து பரிமா றிக்கொள்ள முடியும். மேலும் தீவிரவாத தடுப்பு நடவடிக்கையில் இரு நாடுகளும் தொடர்ந்து ஒத்துழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## புதிய புலிகள் கண்டுபிடிப்பு



(கோவை)

கேரள காடுகளில் நீலகிரி கடுவா என்று அழைக்கப்படும் புதிய புலிகள் வசிப்பதாகவும் அவை சிறுத்தை உடலுடன் நாய் முகத்துடன் இருப்பதாகவும் கேரளாவை சேர்ந்த வனவிலங்குகள் ஆராய்ச்சியாளர் தெரிவித்தார்.

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளில் வன விலங்குகள் குறித்து ஆராய்ச்சி செய்து வருபவர் கொச்சியை சேர்ந்த டிஜோ தாமஸ். காடுகளில் முகாமிட்டு, தொடர்ந்து வனவிலங்குகள் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்வதால், சடை பிடித்த முடியுடன், சாமியார் போன்று காணப்படுகிறார். தனது ஆய்வு குறித்து அவர் கூறியதாவது,

**நீலகிரி கடுவா புலி**

கடந்த 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், கேரள மாநிலத்தில் உள்ள நெய்யார் அணை அருகே, ஒரு புது வகையான புலிகள்வாழும் அறிகுறிகள் காணப்பட்டன. இதனை தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி திருச்சூர் மாவட்டத்தில் உள்ள காஞ்சனி வனப்பகுதியில் மேற்கண்ட அந்த புலிகளின் நடமாட்டம் தெளிவாக கண்டறியப்பட்டது. இந்த புதிய புலி இனத்தை, நீலகிரி கடுவா என்று அழைக்கலாம். இந்த நீலகிரி கடுவா புலி என்பது சிவப்பு நிறம் கலந்த, பழுப்பு நிறத்தில் இருக்கும். இது பார்ப்பதற்கு சிறுத்தை புலி போன்று காணப்படும். இதன முகம் நாயைப்போன்று இருக்கும். உலகளவில் பெரிய பூனைகளின் இனம் என்று, சிங்கம், புலி, சிறுத்தை இனங்கள் அழைக்கப்படுகின்றன.

இந்த வரிசையில் புது வகையான நீலகிரி கடுவா புலி, உலகின் 8ஆவது புலி இனமாக கருதப்படுகிறது. (இ-5)




## இந்.-பாக். பேச்சுக்கு பான் கீ மூன் ஆதரவு



இந்தியா, பாகிஸ்தான் இடையேயான நேரடிப் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் ஆதரவளிக்க தயாராக இருப்பதாக, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பான் கீ மூனின் செய்தித் தொடர்பாளர் ஸ்டெபானி துஜாரிக் கூறியதாவது,

பான் கீ மூன் தனது பதவிக் காலம் முழுவதும், காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தானுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்துவதை ஆதரிப்பார்" எனத் தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டு, பான் கீ மூனின் பதவிக்காலம் நிறைவடையவுள்ளது. இருநாடுகளுக்கு இடையேயான பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் ஆர்வம் காட்டி வந்தார். எனினும், இரு நாடுகளும் தாங்களாகவே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் அவர் பேணி வந்தார். (இ-5)

## மதுராவில் மோதல் 21 பேர் உயிரிழப்பு!



மதுராவில் ஆக்கிரமிப்பை அகற்றியபோது ஏற்பட்ட மோதலில் உயிரிழ்ந்தோர் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்து உள்ளது. இச்சம்பவம் தொடர்பாக உத்தரபிரதேச அரசு விசாரணைக்கு உத்தரவிட்டு உள்ளது. தேவையான உதவிகள் அனைத்தும் வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதி அளித்துள்ளார்.

**மதுரா மோதல்**

உத்தரபிரதேச மாநிலம் மதுரா மாவட்டத்தின் ஜவகர்பாத் பகுதியில் 260 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட பூங்காவை “சத்தியாக்கிரகிகள்” என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் கடந்த 2 வருடமாக ஆக்கிரமித்து கொண்டனர்.

இதனை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. சட்டவிரோதமாக ஆக்கிரமித்தவர்களை வெளியேற்ற அலகாபாத் நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவு இருப்பினும் ஆககிரமிப்பாளர்களை வெளியேற்றுவதில் பொலிஸார் தோல்வியை தழுவினர்.

பூங்காவை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தவர்களை நேற்று முன்தினம் பொலிஸார் வெளியேற்ற முயற்சி செய்தபோது மோதல் வெடித்தது.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்றதும் ஆக்கிரமிப்பாளர்கள் அவர்கள் மீது கற்களை வீசினர், துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டனர். இதனையடுத்து பதிலடி கொடுக்கும் விதமாக பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டை வீசினர், மற்றும் தடியடி நடத்தினர். சம்பவம் நடை பெற்ற இடத்தில் இருந்து நாட்டு துப்பாக்கிகள் மற்றும் கைத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் அதிகாரி சவுத்ரி கூறியுள்ளார். மோதலில் 2 பொலிஸார் மற்றும் 12 ஆக்கிரமிப்பாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்பட்டது. 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோதல் வெடித்த பகுதியில் கையெறி குண்டுகள் மற்றும் எல்பிஜி சிலிண்டர்கள் வெடித்ததால் குடிசைகள் தீப்பிடித்து எரிந்தது. தீக் காயம் அடைந்தவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் சிலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து உள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்து உள்ளது.

இதற்கிடையே மோதல் சம்பவத்தில் 25 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்முறையில் ஈடுபட்ட ஆக்கிரமிப்பாளர்களை பொலிஸ் படை வலைவீசி தேடி வருகிறது.

இதுதொடர்பாக இதுவரையில் பொலிஸ் 374 பேரை கைது செய்து விசாரித்து வருகிறது. (இ-5)

## மக்களாட்சிக்கு விரோதமான சக்திகளை தடுக்க வேண்டும்

### கருணாநிதி பிறந்த நாள் செய்தி

நமது சமுதாய - அரசியல் கட்டமைப்பில் ஊடுருவியுள்ள மக்களாட்சிக்கு விரோதமான சக்திகளை தடுத்து நிறுத்த இளைஞர்கள் உறுதி மொழி ஏற்க வேண்டும் என திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

தனது 93ஆவது பிறந்த நாளையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில், ‘சட்ட மன்றத் துறை, நீதித்துறை, நிர்வாகத் துறை, பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகத் துறை ஆகிய நான்கு தூண்களே மக்களாட்சி எனும் மணி மண்டபத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

அந்தத் தூண்கள், எத்தகைய தூய்மையான நோக்கங்களைத் தாங்கிப் பிடிப்பதற்காக உருவாக்கப்பட்டனவோ, அந்த நோக்கங்கள் இந்த நூற்றாண்டில் மிகப் பெரும் சோதனைக்குள்ளாகி, சவால்களை எதிர் நோக்கியுள்ளன.

**சோதனைகளில் வென்று,**

புடம் போட்ட பொன்னாக மிளிர வேண்டிய அந்தத் தூண்கள், துருப்பிடிக்கத் தொடங்கிவிட்டன. அவற்றின் பெருமானமும் சரியத் தொடங்கி விட்டன.

அதற்குக் காரணம், மக்களாட்சிக்கு விரோதமான சக்திகள், நமது சமுதாய - அரசியல் கட்டமைப்பின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடுருவி, உருக்குலைத்து வருகின்றன என்பதுதான்.

இந்த எதிர்மறைப் பாதிப்பை எப்பாடுபட்டேனும் தடுத்து நிறுத்தி, மக்களாட்சியின் நான்கு தூண்களினுடைய நல் ஆரோக்கியத்தை மீட்டெடுக்கவும், ஜனநாயக - சோஷலிச - சமய சார்பற்ற சக்திகள் ஒன்றுபட்டு, ஆழ வேரூன்றிச் செல்வாக்கு பெறவும், நமது நாட்டின் இளைஞர்கள் எத்தகைய தியாகத்தையும் செய்ய, உறுதி மேற்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன்" இவ்வாறு அவர் கூறியுள்ளார். (இ-5)



# சிறுவர் அரங்கம்

1452

# யார் மன்னர்?

முன்னொரு காலத்தில் நீதி தவறாத மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். மக்கள் அவனை மிகவும் மதித்துப் போற்றினர். தங்கள் உயிரும், கண்ணும்போல் பேணி வாழ்ந்தனர். அம்மன்னனது வெண் கொற்றக் குடையின் கீழ் மக்கள் எவ்விதக் குறையும் இல்லாமல் இன்புற்று வாழ்ந்தனர். அம்மன்னன் உடலில் நரையும், திரையும் தோன்றிக் கிழவனாகிவிட்டான்.

ஒருநாள் தன் புதல்வர்கள் மூவரையும் அழைத்தான். புதல்வர்க்ளைத் தன் அருகில் அமரச் சொன்னான். அவர்களைப் பார்த்து கூறினான்.

"என் அருமை மைந்தர்களே! நான் தொண்டுக் கிழவனாகி விட்டேன். இனி என்னால் நல்ல முறையில் அரசாள முடியாது. பொறுப்புகளையும், கடமைகளையும் இனி நல்ல முறையில் செய்வதற்கு எனக்குச் சக்தி இல்லை. ஆகையால், நான் கால் நடையாகவே காசிக்குச் சென்று வருகிறேன். அரசாளும் பொறுப்ப்பை நீங்கள் மூவரும் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று கூறினான் மன்னன்

அதன் பின்னர் எந்த விதக் கவலையுமின்றிக் காசிக்குப் புறப்பட்டு சென்றான். அவனது புதல்வர்கள் மூவரும் அரசியல் அலுவல்களைத் தம்முள் பகிர்ந்து கொண்டு, நாட்டை ஆண்டு வந்தனர். காசிக்குச் சென்ற மன்னனைப் பற்றி ஓர் ஆண்டு வரையில், எந்த விதமான தகவலும் வரவில்லை. அதன் பிறகு எல்லாரும் வருந்தத்தக்க செய்தி வந்து சேர்ந்தது.

"கால் நடையாகச் சென்ற மன்னன் காசிக்குச் சென்றடையுமுன் வழியிலேயே இறந்து விட்டான்' என்னும் துயரச் செய்தி வந்து சேர்ந்தது. மன்னனுடன் சென்றவர்கள் திரும்பி வந்து துயரச் செய்தியைத் தெரிவித்தனர்.

அம்மன்னனுடைய அருமை பெருமைகளை எண்ணி நாடு முழுவதும் துயரத்தில் மூழ்கியது. துயரமோ, மகிழ்ச்சியோ என்றும் நிலை பெறுவதன்றோ? சில நாட்களில் தான். பலரும் அவனை தேற்ற, அவன் ஒருவாறு மனம் தேறினான். அதன் பின்னர் கிழவன், அம் மன்னவனின் பிள்ளைகளின் நிலைமைகள் பற்றிச் சிலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.



எல்லாரும் ஒருவாறு துயரம் நீங்கி, தத்தம் செயல்களில் கவனம் செலுத்தினர்.

ஒருநாள் ஏழைக் கிழவன் ஒருவன், கிழிந்த உடைகளை அணிந்து கொண்டு அரண்மனை பக்கம் வந்தான்.

"பழைய மன்னவன் இல்லையே!" என்று சொல்லி வாய்விட்டு அழுதான்.

தந்தை இறந்த செய்தியைக் கேட்ட நாள் முதலாக முதல் மகன் துயரில் மூழ்கி, வருந்தி வருந்தி இளைத்துத் துரும்பாகி விட்டான். அவனது முகத்தில் பொலிவில்லை. அவன் பேசிய சொற்களில் தெளிவில்லை. அவனது செயல்களில் அவனுக்குக் கவனம் இல்லை. தந்தையிடம் அவன் வைத்திருந்த அன்பு, அவனை அந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டது.

(தொடரும்)

06.2016

04

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1039 - மூன்றாம் ஹென்றி புனித ரோமப் பேரரசன் ஆனான்.
- 1707 - யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டம் ஒல்லாந்தரினால் அமுல்படுத்தப்பட்டது.
- 1878 - உதுமானியப் பேரரசு சைப்பிரசை ஐக்கிய இராச்சியத்துக்கு கொடுத்தது.
- 1896: பெற்றோலில் இயங்கும் தனது வாகனத்தின் முதல் சோதனை ஓட்டத்தை ஹென்றி போர்ட் வெற்றிகரமாக நடத்தினார்.
- 1896 - ஹென்றி ஃபோர்ட் பெற்றோலில் இயங்கும் தனது முதலாவது தானுந்தை வெற்றிகரமாகச் சோதித்தார்.
- 1912 - மாசச்சூசெட்ஸ் மிகக்குறைந்த ஊழியத் தொகையை நிர்ணயம் செய்த முதலாவது அமெரிக்க மாநிலமானது.
- 1917 - முதலாவது புலிட்சர் பரிசுகள் வழங்கப் பட்டன.
- 1919 - பெண்களின் உரிமைகள்: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டமூலத்துக்கு அமெரிக்க சட்டமன்றம் அனுமதி அளித்தது.
- 1920 - பாரிசில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடு ஒன்றின் படி அங்கேரி தனது 71மூ நிலத்தையும், 63மூ மக்களையும் இழந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் என்ற இடத்தில் இருந்த 300,000 பிரித்தானியப் படைகள் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மானியப் படைகள் பாரிஸ் நகரைனுள் நுழைந்தனர்.
- 1943 - ஆர்ஜெண்டீனாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் ரமோன் கஸ்டீல்லோ பதவியிழந்தார.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கக் கடற்படையினர் செருமானிய நீர்மூழ்கிக் கப்பல் யூ-505 ஐக் கைப்பற்றினர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ரோம் நகரம் நேச அணிகளிடம் வீழ்ந்தது.
- 1957 - மார்ட்டின் லூதர் கிங் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் "அறப்போராட்டத்தின் வலிமை" என்ற தனது உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.
- 1970 - தொங்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1979 - கானாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜெனரல் ஆச்சியாம்பொங் பதவியிறக்கப்பட்டு ஜெரி ரோலிங்க்ஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்.
- 1987 - பூமாலை நடவடிக்கை: இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட வான்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்த இந்திய வான்படை விமானங்கள் யாழ் குடாநாட்டின் மீது உணவுப் பொதிகளை வீசியது.
- 1988 - சோவியத் ஒன்றியத்தில் கசக்ஸ்தான் நோக்கிச் சென்ற தொடருந்து வெடித்ததில் 91 பேர் கொல்லப்பட்டனர். 1,500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.
- 2001 - அரச மாளிகையில் ஜூன் 1 இல் இடம் பெற்ற படுகொலைகளை அடுத்து ஞானேந்திரா நேபாளத்தின் மன்னராக முடி சூடினார்.

### பிறப்புகள்

- 1910 - கிறிஸ்தோபர் கொக்கரல், ஆங்கிலேயக் கண்டுபிடிப்பாளர். (இ. 1999)
- 1932 - எஸ். பொன்னுத்துரை, ஈழத்து எழுத்தாளர். (இ. 2014)
- 1946 - எஸ். பி. பாலசுப்ரமணியம், இந்தியத் திரைப்பட இசைப் பாடகர்.
- 1959 - அனில் அம்பானி, இந்தியத் தொழில் அதிபர்.
- 1970 - தேவு பிபுசு, ஆங்கிலேய இசைக்கலைஞர்
- 1974 - ஜேக்கப் சகாயகுமார் அருணி, இந்திய சமயற்கலை நிபுணர். (இ. 2012)
- 1975 - ஏஞ்சலினா ஜோலி, அமெரிக்க நடிகை
- 1981 - டி. ஜே. மில்லர், அமெரிக்க நடிகர்.
- 1984 - ஜெனவீவ் ஜ்"லி, அமெரிக்க நடிகை
- 1990 - ஜெட்சுன் பெமா, ஜிக்மே கேசர் நாம்கியல் வாங்சுக்கின் பூட்டானிய மனைவி

### இறப்புகள

- 1798 - கியாகோமோ காசநோவா, இத்தாலிய நாடுகாண் பயணி. (பி. 1725)
- 1925 - வ. வே. சு. ஐயர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர். (பி. 1881)
- 1941 - இரண்டாம் வில்லியம் (செருமனி). (பி. 1859)

### சிறப்பு நாள

- தொங்கா - விடுதலை நாள். (1970)

## எஸ்.பொன்னுத்துரை

### ஈழத்து எழுத்தாளர்



ச.பொன்னுத்துரை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். சிறுகதை, புதினம், நாடகம், கவிதை, விமர்சனம், மொழிபெயர் ப்பு, அரசியல் என பல பரிமாணங்களிலும் எழுதியவர். 40 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 1989 முதல் புலம் பெயர்ந்து ஆத்திரேலியா வின் சிட்னி நகரில் வாழ்ந்து வந்தார். சென்னையில் மித்ர என்ற பதிப்பக த்தை நிறுவி அதன் மூலம் நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டிருந்தார். யாழ்ப்பாணம், நல்லூரில் சண்முகம் என்பவருக்குப் பிறந்த இவர் சென்னை கிறித்தவக் கல்லூரியிலும் தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி பயின்றார். 1940 இல் இவரது மூத்த சகோதரர் தம்பையா ஞானோதயம் என்ற கையெழுத்து இதழை நடத்திய பொழுது அதில் எழுத ஆரம்பித்தார். . இவர் எழுதிய முதலாவது புதினம் தீ ஈழத்து இலக்கியத்தில ஒரு திருப்புமுனையை தோற்றுவித்ததுடன் பல சர்ச்சைகளையும் உருவாக்கியது. தமிழகத்தில் சரஸ்வதி என்ற இதழை நடத்திய வ. விஜயபாஸ்கரனின் முயற்சியால் இந்நூல் வெளியானது. இதனால், பொன்னுத்துரையும் தமிழ் இலக்கிய உலகில் ஒரு சர்ச்சைக் குரிய மனிதராக இருந்து வந்தார். புரட்சிப்பித்தன், பழமைதாசன் போன்ற பல புனை பெயர்களில் இவர் எழுதினார். அவருடன் இளம்பிறை ரஹ்மான், வ. அ. இராசரத்தினம் போன்ற சிலரும் வெளியேறினர். சடங்கு, தீ, ஆண்மை, வீ, நனைவிடை தோய்தல், இனி ஒரு விதி செய்வோம் எனப் பல புதினங்களை எழுதிப் புகழ் பெற்றார். பொன்னுத் துரையின் சில நாடகங்கள் இலங்கை, இந்தியா, ஆத்திரேலியா முதலான நாடுகளில் மேடையேறியுள்ளன. தமிழ்நாட்டில் சில தொலைக்காட்சி களிலும் சில தொடர் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். ஆத்திரேலியாவில் சிறிது காலம் வெளிவந்த "அக்கினிக்குஞ்சு" என்ற பன்னாட்டு இதழின் கௌரவ ஆசிரியராக இருந்தார். கொழும்பிலிருந்து வெளிவரும் ஞானம் இதழில் அதன் ஆசிரியரின் கேள்விகளுக்கு எஸ்.பொ தெரிவிக்கும் நீண்ட பதில்களைக் கொண்ட தொடர் நேர்காணல் பல மாதங்களாக வெளியானது. பின்னர் இத்தொடர் தீதும் நன்றும் பிறர்தர வரா என்ற தலைப்பில் 2007 இல் நூலாக வெளியானது. இவரது நேர்காணல்கள், கட்டுரைகள் அடங்கிய இனி ஒரு விதி செய்வோம் என்ற நூலும் வெளிவந்துள்ளது. 1924 பக்கங்களில் வரலாற்றில் வாழ்தல் என்ற தமது சுயவரலாற்று நூலையும் எழுதியுள்ளார். சென்னையில் "மித்ர" பதிப்பகத்தின் மூலம் நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டார். இவருக்கு தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இயல் விருது வழங்கப் பட்டது. எஸ். பொன்னுத்துரை 2014 நவம்பர் 26 அன்று சிட்னி கொன் கோர்ட மருத்துவமனையில் காலமானார். இவரது ஒரு மகன் ஈழப் போரின் போது 1986 கடற்சமரில் இறந்த ஒரு மூத்த விடுதலைப் புலிப் போராளி ஆவார்.

# ஒரேயொரு ஆலோசகரைத்தான் அமைச்சுக்கு நியமித்துள்ளேன்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

**அமைச்சிற்காக ஒரேயொரு ஆலோசகரையே தாம் நியமித்துள்ளதாக பெருந்தெருக்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் தெரிவித்தார்.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு ஆலோசகரே தமது அமைச்சில் கடமையாற்றுகின்றார் என அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சில் 94 இணைப்புச் செயலாளர்கள் கடமையாற்றி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

சர்வதேச ரீதியில் பிரபல்யமான கலாநிதி விமல் குணவ்தனவே அமைச்சின் ஆலோசகராக கடமையாற்றுகின்றார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்பார்வையாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு நியமனங்களை வழங்கியுள்ளது.

தனது அமைச்சில் பெரும் எண்ணிக்கையிலான இணைப்புச் செயலாளர்களோ அல்லது ஆலோசகர்களோ கிடையாது.

இதேவேளை, ஒவ்வொரு அமைச்சிற்கும் ஒரு ஆலோசகரை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை அரசின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது-இந்தியா

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை கண்டிக்கத்தக்க ஒன்று என இந்திய மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



தமிழக மீனவர்கள் 7 பேர் அண்மையில் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள், மீன்பிடி தடை காலம் முடிந்து முதன் முதலாக மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர். எனினும், குறித்த 7 பேரையும் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த செயலானது வன்மையாக கண்டிக்க கூடிய ஒன்று. இந்நிலையில் மீனவர்கள் விடுவிக்க இலங்கை அரசாங்கம் தனி கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன், இனியும் தேவையற்ற முறையில் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிராந்தியின் ஹோட்டல் கட்டணத்தை அரசு செலுத்த வேண்டி நிர்ப்பந்தம்!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ஷவின் ஹோட்டல் கட்டணத்தை செலுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற வெசாக் விழாவினை பார்வையிடுவதற்காக சிராந்தி ராஜபக்ஷ சென்றிருந்தார் எனவும், அங்கு சில நாட்கள் பிரதான ஹோட்டலில் தங்கியிருந்தார் எனவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம்கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி சிராந்தி ராஜபக்ஷ பிரான்ஸில் நடைபெற்ற வெசாக் நிகழ்வு ஒன்றை பார்வையிடுவதற்காக 2014 ஆம் ஆண்டு சென்றிருந்தார்.

பிரான்ஸின் பாரிசில் ஒரு இரவிற்கு 25,73,746 ரூபா என்ற அடிப்படையில் அறை ஒதுக்கப்பட்டு தங்கியுள்ளார்.

இது தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு கோரி ஹோட்டல் பில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிராந்தியுடன் இந்த விஜயத்தில் இணைந்து கொண்ட ஏனையவர்களும் ஜனாதிபதிகள் பயன்படுத்தும் அளவிலான அறைகளை ஒதுக்கீடு செய்து கொண்டுள்ளனர்.

அறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக தலா 700 யூரோக்களும், மினி பார்களுக்காக தலா 371 யூரோக்களும் செலவிடப்பட்டுள்ளன.

மக்களின் பணத்தைக் கொண்டு இவ்வாறு செய்யும் விரயங்களுக்கான செலவுகளை அரசாங்கமே செலுத்த நேரிட்டுள்ளது.



கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இவ்வாறு பணம் விரயமாக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய ஜனாதிபதி ஜி-7 மாநாட்டின் போது கூட, பிரத்தியேக விமானத்தில் பயணம் செய்யவில்லை. வர்த்தக விமானமொன்றிலேயே பயணம் செய்திருந்தார்.

தனியான விமானமொன்றில் செல்லாத காரணத்தினால் ஜப்பானிய அரசாங்கம் வழங்கிய சிவப்பு கம்பள வரவேற்பு ஜனாதிபதிக்கு வழங்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இது தொடர்பில் ஜப்பான் அரசாங்கம் வருத்தம் தெரிவித்திருந்தது. அது ஒரு பெரிய விடயமல்ல எனவும் அதனை தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி பதிலளித்திருந்தார்.

சாதாரண வர்த்தக விமானமொன்றில் சிங்கப்பூர் சென்று அங்கு நான்கு மணித்தியாலங்கள் காத்திருந்து அதன் பின்னர் ஜப்பானுக்கு ஜனாதிபதி சென்றிருந்தார் எனவும் இதனால் பாரியளவு பண விரயம் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிராந்தி ராஜபக்ஷ பிரான்ஸ் பயணம் மேற்கொண்டு நீண்ட காலத்தின் பின்னர் ஹோட்டல் பில் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### இதுகூடத் தெரியாதா?

எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்திருக்கும் என எதிர்பார்ப்பதும், அப்படி எண்ணிக் கொண்டிருப்பதும் பேதமை, அதுவும் நமக்குத் தெரிந்திருக்கும் விடயங்கள் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று எதிர்பார்ப்பது முன்னதை விட மோசமானது.

குறிப்பிட்ட விடயங்களை மற்றவர்கள் தெரிந்து வைத்திராமல் இருப்பது ஒன்றும் பெரிய குறையல்ல. நினைவாற்றல் இல்லாமலிருத்தல்; ஆர்வமின்மை; சமய சந்தர்ப்பங்கள் வாய்க்காமல் போதல்; பக்குவப்படாத நிலை ஆகிய பல காரணங்களால் அவை அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்கலாம்.

இதைப் பெரிதுபடுத்துவது விவேகமாகாது.

என்னது இது கூடவா தெரியாது?

உனக்கு என்னதான் தெரியுமோ?

என்றெல்லாம் கேள்விகேட்டோ , இளக்காரமாகப் பேசியோ, கேவலப்படுத்திச் சிரித்தோ மகிழ்ச்சி காண்பது ஒரு கீழ்த்தனமான இரசனை.

இத்தகைய விடயத்தில் அவர்களுக்காக நாம் இரக்கப்படலாமே தவிர, அதை ஒரு கேலிக்குரிய அம்சமாக மாற்ற வேண்டியதில்லை.

இது, ஒரு மக்கை மாணவனாகக் கொண்ட ஆசிரியருக்கு மட்டுமல்லாமல், ஓர் அசமஞ்ச வேலைக்காரனை வேலைக்கு அமர்த்தியுள்ள ஒரு முதலாளிக்கு மட்டுமல்லாமல் மற்ற பல்வேறு பிரிவினருக்கும் பொருந்தும்.

மற்றவர்கள் மடையர்கள் என்பதைத் தோலுரித்துக் காட்டும் செயல் ஒரு நாள் நமக்கு எதிராகவே திரும்பிவிடுவதுண்டு.

அவர்களோ தங்கள் அறியாமையைப் பற்றிக் கவலைப்படாமல் தோலுரித்துக் காட்டிய நமது செயல் குறித்து வருத்தமோ கோபமோ கொள்கிறார்கள்.நம்மை வெறுக்கிறார்கள்; பழிவாங்கத் துடிக்கிறார்கள். அதுவும் பலரை வைத்துக் கொண்டு இப்படி செய்தால் அதன் விளைவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

அவர்கள் சாதாரண விடயங்களைக் கூட அறிந்து வைத்திராத மடையர்களாக இருக்கலாம். ஆனால் இத்தகைய விடயங்களை நாம் கண்டு கொள்ளாமல் இருப்பதே விவேகம்.

நீங்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும் அவர்களுக்குத் தெரியும் என்பதாக நீங்கள் காண்பித்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அந்த விடயத்தை ஒரு நினைவூட்டும் பாணியில் சொல்வதாக காண்பித்துக் கொள்ளலாம்.

நாம் ஒருவருக்குத் தெரிந்திருக்கும் என்ற அனுமானத்தில் விடயத்தைப் பற்றிப் பேச , அவரோ அது தெரியாமல் திருதிருவென விழித்தால் அதைச் சட்டெனப் புரிந்து கொண்டு வேறு விடயத்திற்குத் தாவி விடலாம்.

அவர்களுக்குத் தெரியவில்லையே என்பதற்காக அவர்களின் மீது உள்ளுக்குள் அனுதாபப்படலாமே தவிர , அதை வெளியில் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. அவர்கள் பலவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நாம் அக்கறைப்படுவதை வேண்டுமானால் அவர்களிடம் வெளிக்காண்பித்துக் கொள்ளலாம்.

மற்றவர்களின் அறியாமையைக் கண்டு கொள்ளாமல் இருப்பது சரியில்லை தான். ஆனால் எல்லோரும் நம்மை விரும்ப வேண்டுமே!

**லேனா தமிழ்வாணன்**

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப ஜனாதிபதி அறிவுரை

மேல்மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை விரைவில் நிரப்புமாறு மேல்மாகாண சபையின் கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவன்சவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேல்மாகாணத்தில் ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காக 2014ஆம் ஆண்டு பரீட்சை ஒன்று நடைபெற்றதாகவும், ஆனால் குறித்த பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இதுவரை ஆசிரியர்களாக நியமிக்கப்படவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் வெயங்கொட-பத்தலகெதர ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற கம்பஹா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலேயே பிரசன்ன ரணதுங்கவால் ஆசிரியர் பற்றாக்குறை விடயமானது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நேற்றைய தினம் ஜனாதிபதியால் மேல் மாகாணசபை கல்வி அமைச்சருக்கு இந்த விடயம் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-03.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 145.16 | 148.82 |
| பிரிட்டன் | பவுண்ட் | 208.34 | 215.56 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 160.81 | 167.10 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.57 | 151.55 |
| கனடா | டொலர் | 110.13 | 114.64 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 103.98 | 108.79 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.06 | 109.04 |
| இந்தியா | ரூபா | 2.1709 | ------- |
| சீனா | யுவான் | 22.1652 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 387.1147 |
| குவைத் | டினார் | 483.1662 |
| ஓமான் | ரியால் | 379.0761 |
| கட்டார் | ரியால் | 40.0934 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.9164 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.7348 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 350 | 250 | 350 | 240 | 240 | 300 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 200 | 400 | 400 | 500 | 400 | 500 |
| தக்காளி | 250 | 200 | 160 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 60 | 80 | 70 |
| கோவா | 140 | 200 | 120 | 200 | 160 | 200 | 180 |
| கரட் | 150 | 200 | 150 | 160-300 | — | 200 | 200 |
| பூசணி | 60 | 90 | 50 | 80 | 60 | 80 | 50 |
| புடோல் | 120 | 150 | 100 | 120 | 120 | 120 | 100 |
| வாழைக்காய் | 70 | 80 | 50 | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 150 | 140 | 140 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 180 | 70 | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 260 | 600 | 250 | 250 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 220 | 150 | 150 | 140 | 140 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 100 | 120 | 100 | 200 | 120 |
| பயற்றங்காய் | 320 | 400 | 250 | 260 | 240 | 200 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 180 | 120-200 | 220 | 240 | 250 |
| பீற்றூட் | 140 | 160 | 110 | — | 100 | 240 | 150 |
| கறிமிளகாய் | 240 | 200 | 200 | 200 | 220 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 150 | 180 | 140 | 240 | 150 |
| போஞ்சி | 350 | 400 | 200 | 240 | 240 | 320 | 300 |
| கத்தரிதம்புள்ள | 240 | 250 | 170 | 300 | 240 | 240 | 280 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 50 | 60 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 300 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-25 | 40 | 30 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | 160 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | — | 120 | — | 160 | — |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 80 | 100 | 100 | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## நோர்வே சமரச முயற்சி விடுதலைப்புலிகள் போர்நிறுத்தம் 196

...அதில் தான் அவர்களை அடைத்து வைத்திருந்தனர். காரணம் அவர்கள் 15 வயதைத் தாண்டாதவர்கள்.

இவர்களை உள்ளே வைத்திருந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. 15 வயதைத் தாண்டாத சிறுவர்களைக் கூட விடுதலைப் புலிகள் போரில் ஈடுபடுத்தினார்கள் என்று சர்வதேச அரங்கில் அரங்கேற்ற இவர்களை ஆதாரமாக அரசு காட்டுவதற்காகத்தான்.

இந்த சிறையில் தமிழ்க் கைதிகள் இருப்பது சிங்களவர்களுக்குத் தெரியும். 25.10.2000 அன்று சிங்களக் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 400 பேர் பிந்துனுவேவா சிறைச்சாலைக்குள் கட்டை, கம்பு, கத்திகளுடன் புகுந்தனர். எங்கே கொலைகாரத் தமிழர்கள் என்று கோஷமிட்டபடி தமிழ்ச் சிறுவர்களை அடித்தும் மிதித்தும் கொலை செய்தனர். இதில் 29சிறுவர்கள் பலியானார்கள். 11 பேர் காயமடைந்தனர்.

இந்த படுகொலைக்குச் சில பிரிவினைவாதிகள் தான் காரணம் என்று ஜனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டினார். இது பற்றி விசாரிக்கப் பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய 2 குழுக்களை அவர் நியமித்தார்.

விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டது பற்றித் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர் சம்பந்தன் கூறுகையில்,

சரண் அடைந்த விடுதலைப்புலிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுத்திருந்தால் இந்தப் படுகொலைகள் நடந்து இருக்காது என்று குறிப்பிட்டார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே சமரச முயற்சியில் ஈடுபட்டது. இதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள், போர்நிறுத்தம் செய்வதாக அறிவித்தனர். ஆனால் அரசு போர் நிறுத்தம் செய்ய மறுத்து விட்டது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சமரசம் செய்து வைக்கும் முயற்சியில் நோர்வே தூதுக்குழு ஈடுபட்டது.

நோர்வே நாட்டின் சிறப்புத் தூதர் எரிக் சோல்கிம் ஏற்கனவே இலங்கையிலும் இந்தியாவிலும் சுற்றுப்பயணம் செய்து முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

### பிரபாகரனுடன் சந்திப்பு

இந்தநிலையில் நோர்வே தூதுக்குழுவினர் 01.11.2000 அன்று மாலை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினார்கள்.

விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள வன்னிப் பகுதியில் இருக்கும் மல்லாவி என்ற சிறிய நகரில் இப் பேச்சுவார்த்தை நடந்தது.

நோர்வே தூதுக்குழுவில் எரிக் சோல்கிம் தவிர இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன்வெஸ்ட் பேர்க், நோர்வே வெளியுறவு இலாகாவைச் சேர்ந்த பெண் அதிகாரி கோஸ்டி ரோம்ஸ்டால் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

அரசுடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்துமாறு நோர்வே குழுவினர் பிரபாகரனிடம் கோரிக்கை விடுத்தனர். 2 மணி நேரம் இந்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

பேச்சுவார்த்தையைத் தொடங்க அரசுக்கு பிரபாகரன் பல்வேறு நிபந்தனைகளை விதித்தார். போர் நெருக்கடிகள் தணிக்கப்பட்டு, இராணுவ ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு தமிழர் பகுதியில் இயல்பு நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பேச்சுவார்த்தையின் போது பிரபாகரன் மேலும் கூறியதாவது,

சந்திரிகா அரசு சமாதானம் பற்றியும் சமாதானப் பேச்சுக்கள் பற்றியும் வாயளவில் பேசுகிறது. உண்மையில் அரசுக்கு சமாதானத்திலும் அரசியல் தீர்விலும் நம்பிக்கை இல்லை. உலக சமூகத்தை ஏமாற்றும் நோக்குடனே சந்திரிகா சமாதான முகமூடி அணிந்து நடிக்கிறார்.

### தாக்குதலை நிறுத்த வேண்டும்

சந்திரிகா அரசு இராணுவ தீர்வையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாகப் போர் நெருக்கடிகள் தணிக்கப்பட்டு இயல்பு நிலை உருவாக்கப்படுவது அவசியம்.

தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும். இராணுவ நெருக்குதலும் ஆக்கிரமிப்புக்களும் அகற்றப்பட்டு இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பிரபாகரன் கூறினார்.

### போர் நிறுத்தம் வருமா?

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக ராஜீவ்காந்தியைப் பிரபாகரன் சந்தித்துப் பேசினார். அதன் பிறகு கடந்த 13 ஆண்டுகளாக எந்த வெளிநாட்டுப் பிரதிநிதியையும் பிரபாகரன் சந்தித்துப் பேசியது இல்லை.

இப்போது முதல் முறையாக நோர்வே குழுவிடம் பிரபாகரன் பேசி இருப்பது நாட்டின் பிரச்சினையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது.



நோர்வே குழுவினருடன் பிரபாகரன். பாலசிங்கம் உடன் இருக்கிறார்.

(தொடரும்)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை எந்த நேரத்திலும் நடத்தத் தயார்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எந்த நேரத்திலும் நடத்தத் தயார என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

2016 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு குறித்து நாவலப்பிட்டியில் நேற்று முனதினம் நடைபெற்ற கூட்டமொ ன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எந்த நேரத்திலும் நடத்த எமது ஆணைக்குழு தயார் நிலையில் உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த நாம் தயார்.

எனினும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்குமான உறுப்பினர் எண்ணிக்கை நிர்ணயம் செய்து வர்த்தமானியில் அறிவிக்கப்படும் வரையில் தேர்தல் நடத்துவதில் சிக்கல் காணப்படுகின்றது.

மேலும் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தீர்ப்பினையோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையையோ உத்தியோகபூர்வமாக அறிவித்தால் தேர்தலை நடத்தத் தயார் என மகிந்த தேசப்பிரிய மேலும் . தெரிவித்துள்ளார். (இ-5)

## வட.-கிழக்கில் இரும்பு பொருத்து வீட்டுத்திட்டம் பொருத்தமற்றது

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சால்முன் மொழியப்பட்ட 65 ஆயிரம் இரும்பு பொருத்து வீட்டுத்திட்டம் பொருத்தமற்றது என கிழக்கு மாகாண சபை உறு ப்பினர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களுக்கு சீமெந்துப் பக்கெட்டுகளை கையளிக்கும் நடவடிக்கை அப்பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோதே, அவர் இதனை கூறினார். இங்கு அவர் மேலும் உரையாற்றுகை யில், இந்த இரும்பு பொருத்து வீட்டுத் திட்டமானது எமது நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 65 ஆயிரம் வீடுகள், இரும்பு பொருத்து வடிவில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இரசாயனக் கலவையாலும் பொருத்து பாகங்களாலும் குறைந்த உயரத்தில் அமையும் இந்த வீடுகளில் வெப்பம் அதிகரித்துக் காணப்படும். இந்த வீடுகள் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு பொருத்தமற்றதாகும். குறிப்பாக, வெப்பமான காலத்தில் இந்த வீடுகளில் மக்கள் குடியிருப்பது சிரமமாகும். எனவே, இந்த வீடுகள் எமது சூழலுக்கு பொருத்தமற்றதாகும் என்றார்.

"ஓர் இரும்பு பொருத்து வீட்டுக்கான மொத்தச் செலவு 21 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு கல், மண், சீமெந்தினால் அமைக்கும்போது இரண்டு வீடுகளை அமைக்க முடியும் என்று மக்கள் குறிப்பிடுகின்றனர். தற்போது வடக்கு, கிழ க்கு மாகாணங்களில் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் வீடுகள்தேவையாகவுள்ளன. அவ்வாறாயின், 65 ஆயிரம் பொருத்து வீடுகளுக்குரிய செலவைக கொண்டு எமது மக்களுக்கு பொருத்தமான வகையில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம்வீடுகளை அமைத்துக் கொடுத்து அம் மக்களின் வீட்டுத்தேவையை பூர்த்தி செய்ய முடியும். எனவே, இந்த 65 ஆயிரம் வீட்டுத் திட்டம மக்களுக்காக கொண்டு வரப்படுமபோது, எமது பிரதேசங்களில் உள்ள வளங்களைக்கொண்டு அமைக்கப்பட வேணடும் என்பதுடன், அம் மக்கள் வாழும் சூழலுக்கு ஏற்றவாறு வீடுகள் அமைய வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 740

அச்சு




மது




சிந்து

அதோ போறாளே
அவதான் என்
முறைப்பொண்ணு!
உனக்கு அத்தையோ மாமனோ
இல்லையே அப்புறம் எது
முறைப்பொண்ணு?
நான் பார்க்கிற போதெல்லாம்
என்னை முறைச்சுப்
பார்க்கின்றாளே
அதைச் சொன்னேன்.

மினு




விவிளம்

என்னடி இது, பிச்சைக்காரன்
உன்னோட வந்து குசுகுசுன்னு
பேசிட்டு போறான்...
அட, நீங்க ஒண்ணு...நாங்க
ரெண்டுபேரும்
Face book friends-ங்க!

வின் ஜக்ஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் என்ன செய்கிறார் அமெரிக்க ராஜதந்திரி ஆர்மிரேஜ்?



அமெரிக்கா மற்றும்
வெளிநாட்டு நிறுவன
ங்கள் தமது நிறுவன
ங்களை அனைத்துலக
வர்த்தக அபிவிருத்தி
யில் முன்னேற்றுவத
ற்கும் தமக்கான மூலோ
பாயத் திட்டங்கள் மற்
றும் பிரச்சினைகளுக்
குத் தீர்வு காணுதல்
ஆகியவற்றுக்கும் உந்
துசக்தியாக விளங்கும்
Armitage Interna
tional என்கின்ற நிறு
வனத்தை நடத்தி வருகி
றார் றிச்சார்ட் ஆர்மிரேஜ்.

வியட்னாமுக்கு எதி
ரான யுத்தத்தின் போது
இளமைத் துடிப்புள்ள
வீரம்மிக்க ஒரு அமெ
ரிக்க கடற்படை அதி
காரியாக பங்கு கொண்
டிருந்தார். அன்றிலி
ருந்து அவர் அர்ப்பணி
ப்புடன் சேவையாற்றி
வருகின்றார்.

இவரது வளர்ச்சியின
பெறுபேறாக, அமெரிக்க
ஜனாதிபதி றொனால்ட்
றீகனின் ஆட்சிக்கால
த்தில் றிச்சார்ட் ஆர்மி
ரேஜ் அமெரிக்காவின்
உதவிப் பாதுகாப்புச்
செயலராகவும் பின்னர்
அமெரிக்க ஜனாதிபதி
ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்
சிக்காலத்தில் முன்னெ
டுக்கப்பட்ட பயங்கரவாத
த்திற்கு எதிரான யுத்த
த்தின் போது நாட்டின்
உதவி இராஜாங்கச்
செயலராகவும் பதவி
வகித்துள்ளார்.

கடந்த வாரம், இவர்
இலங்கைக்குப் பயணம்
செய்திருந்தார். தனது
இந்தப் பயணமானது
வர்த்தக நோக்கைக்
கொண்டதல்ல என இவர்
தெரிவித்தார். ஆனால்
இவர் ஒரு சுற்றுலாப்
பயணியாகவோ அல்
லது தன்சொந்தத்தேவை
க்காகவோ இலங்கை
க்கு வரவில்லை என்
பதை இலங்கையில்
தங்கியிருந்த நாட்க
ளில் இவரின் நடவடிக்
கைகள் சுட்டிக்காட்டுகி
ன்றன.

தற்போதும் கூடைப்
பந்து விளையாடும் 71
வயதான ஆர்மிரேஜ்
இலங்கை அரசாங்கம்
மற்றும் எதிர்க்கட்சித்
தலைவர்களையும் சந்
தித்துக் கலந்துரையாடி
னார். இவர் முதன் முத
லாக 1983 இல் அப்
போதைய அமெரிக்கப்
பாதுகாப்புச் செயலர் கஸ்
பர் வெய்ன்பேகருடன்
இணைந்து இலங்கைக்
குப் பயணம் மேற்
கொண்டிருந்தார்.

'சண்டே ரைம்ஸ்'
மேற்கொண்ட நேர்கா
ணலின் போது, அமெ
ரிக்கக் கோட்பாடுகள்,
ஐ.எஸ். தீவிரவாதப் பிரச்
சினைகள், இலங்கை
மனித உரிமைகள் மற்
றும் சீனா மீதான அமெ
ரிக்கக் கோட்பாடுகள்
தொடர்பாகவும் றிச்சார்ட்
ஆர்மிரேஜ் தனது கருத்
துக்களைப்பகிர்ந்து கொண
டார். இந்த நேர்காண
லின் முக்கிய பகுதிகள்
வருமாறு,

கேள்வி: ஜனவரி
2015இல் இலங்கையில்
ஆட்சிமாற்றம் ஏற்பட்ட
பின்னர் அமெரிக்காவு
டனான இலங்கையின்
உறவுநிலை அதிகரித்
துள்ளது. ஆனால் இந்த
உறவு நிலை தற்போது
முன்னேற்றம் கண்டு
ள்ள போதிலும் இன்ன
மும் இது பொருளாதார
நலன்களை நோக்கி
நகரவில்லை. இதன்
பெறுபேறாக, இலங்கை,
இந்திய மாக்கடலில்
உலகின் அதிசக்தி வாய்
ந்த நாடுகளால் முன்னெ
டுக்கப்படும் பூகோள
அரசியல் விளையாட்டி
ற்குள் அகப்பட்டு விடக்
கூடாது என்பதில் மிகக்
கவனமாக உள்ள போதி
லும், இலங்கையின்
புதிய அரசாங்கமானது
சீனாவைத் தனது மீட்ப
ராகவே நோக்குகிறது.
முதுபெரும் இராஜதந்திரி
என்ற வகையில், அமெ
ரிக்காவுடன் நல்லுறவைப்
பேணுமாறு இலங்கை
க்கு எவ்வாறான ஆலோ
சனையை வழங்குவீர்கள்?

பதில்: அமெரிக்க-
இலங்கை உறவானது
மகிந்த ராஜபக்ஷ ஆட்சி
யுடன் ஆரம்பமான ஒன்
றல்ல. இரு நாடுகளு
க்கும் இடையிலான நவீன
தொடர்பாடலானது
ஜோர்ஜ் டபிள்யூ புஷ்
ஷின் காலத்தில் ஆரம்ப
மாகியது. 2001 தொடக்
கம் 2005 வரையான
காலப்பகுதியில் இலங்
கையுடனான அமெரிக்
காவின் உறவானது மிக
வும் அற்புதமானதாக
இருந்தது. இந்த அடிப்
படையில், 2002 இல்,
நாங்கள் மிகவும் நெருக்
கமாகினோம். ஆகவே
இந்த உறவானது மகிந்
தவின் இறுதி ஆட்சிக்
காலத்தில் ஆரம்பமான
ஒன்றல்ல. 2005 தொட
க்கம் பத்து ஆண்டுக
ளாக இலங்கை சுய
தனிமைப்படுத்தலுக்கு
உள்ளாகியிருந்தது.

ஜெனிவாவில் நிறை
வேற்றப்பட்ட தீர்மான
ங்கள் தொடர்பில் ஐ.நா
வுடன் இணைந்து பணி
யாற்றுவதாக அமெரி
க்காவுக்கு இலங்கை
வாக்குறுதி வழங்கியுள்
ளது. ஆகவே நீங்கள்
கூறியது போன்று எமது
உறவானது வர்த்தக சார்
அபிவிருத்தியை மேம்
படுத்துவதை நோக்காகக்
கொண்டதல்ல என்பது
தவறானது. ஜோர்ஜ் டபி
ள்யூ புஷ்ஷின் காலத்தில
இலங்கைக்காக டோக்கி
யோவில் உதவி மாநாடு
ஒன்றை நடத்தியிருந்
தோம்.

அமெரிக்காவின் புதிய
அரசாங்கமானது மேலும
அனைத்துலக சமூகத்
துடன் ஒருங்கிணைந்து
பணியாற்றும் என நான்
நம்புகிறேன். இலங்கை,
சீனாவுடன் அதிகளவில்
தொடர்பைப் பேணுவத
ற்கு அமெரிக்கா காரணம
எனில், இது தொடர்பில்
இலங்கை மற்றும் அமெ
ரிக்கா ஆகிய இரு நாடு
களுக்கும் பாரியதொரு
தவறாக இருக்கும்.

மகிந்த ஆட்சிக்கால
த்தில் தென்னாசியா
மற்றும் அமெரிக்காவைச
சேர்ந்த பெரும்பாலான
வர்கள் இலங்கையுடன்
தொடர்பைப் பேணுவ
தில் தயக்கம் காண்பித்
தனர். இலங்கை ஜனா
திபதி மைத்திரிபால சிறி
சேன மற்றும் பிரதமர்
ரணில் விக்கிரமசிங்க
ஆகிய இருவரும் சீனா
தொடர்பான உறுதியான
எண்ணப்பாட்டைக்கொண்
டுள்ளனர். அதாவது சீனா
வுடன் தொடர்பைப் பேணு
வதன் மூலம் இலங்கை
க்கு கிடைக்கும் நன்மை
என்ன? தீமை என்ன?
என்பது தொடர்பாக இல
ங்கை ஜனாதிபதியும்,
பிரதமரும் தெளிவைக்
கொண்டுள்ளனர். 'இது
வேறுபட்ட இலங்கை.
நாங்கள் முன்னர் நடந்
தது போன்று தற்போது
நடந்து கொள்ள முடி
யாது' என்பதை சீனா
தற்போது நன்கு புரிந்து
கொண்டுள்ளது.

கேள்வி: ஐ.நா. மனித
உரிமைகள் பேரவை
யில் அமெரிக்கா தீர்
மானங்களை நிறை
வேற்றியுள்ளதாக நீங்
கள் குறிப்பிட்டீர்கள்.
ஆனால்உங்களது நாடான
அமெரிக்கா மனித உரிமை
விவகாரத்தை அரசியல்
கருவியாகப் பயன்படுத்
துவதாக பெரும்பாலான
இலங்கையர்கள் நம்பு
கின்றனர்.

பதில்: மனித உரி
மைகள் மற்றும் ஜன
நாயகம் போன்றவற்றை
நாங்கள் எப்போதும்
அரசியல் மாற்றத்தை
அடைவதற்காகவே பய
ன்படுத்துகிறோம் என
எம்மீது அடிக்கடி குற்றச்
சாட்டு எழுவதை நாம்
அறிவோம். மறுபுறத்தே,
நாங்கள் அவ்வாறு செய்
யாவிட்டால், அதன் பின்
னர் நாம் விமர்சனத்
திற்கு உட்படுத்தப்படு
கிறோம். இலங்கையி
லும் மக்கள் எம்மிடம்
'மனித உரிமை மீறல்
கள், வடக்கு, கிழக்கில்
தமிழ் மக்கள் காணா
மற் போதல் போன்றன
தொடர்பாக குரல் எழுப்
பாமைக்கான காரணம்
என்ன?' என வினவு
கிறார்கள்.

நாங்கள் அவ்வாறு
செய்தாலும் அல்லது
செய்யாவிட்டாலும் கூட,
நாங்கள் மனித உரி
மைகள் மற்றும் மனித
அபிவிருத்தி போன்ற
வற்றுக்கு ஆதரவளிக்கி
றோம். நாங்கள் மற்ற
வர்களால் விமர்சிக்கப்
படுகிறோம் என்பதற்காக
மட்டும் இதனைச் செய்ய
வில்லை. அமெரிக்கா
வைப் பொறுத்தளவில்
சில விடயங்களில் எப்
போதும் உறுதியாக இரு
க்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, மக்
கள் தமது கருத்துக்களை
சுதந்திரமாக வெளிப்
படுத்துகின்ற முறைமை
நிலவும் நாடுகளில் பல்
வேறுபட்ட வழிமுறை
கள் கைக்கொள்ளப்படு
வதால் நான் ஜனநாய
கம் மற்றும் ஜனநா
யகத்தன்மை போன்ற
பதங்களைப் பயன்படுத்
தவில்லை. மக்களின்
உறுதியைப் பிரதிநிதித்
துவப்படுத்தும், மக்கள்
தமது கருத்துக்களை
அரசாங்கத்திற்கு தெரி
யப்படுததும் வாய்ப்பைக்
கொணடுள்ள நாடுகளில
செயற்படும் அரசாங்
கத்தை பிரதிநிதித்துவ
அரசாங்கம் என அழை
க்க நான் விரும்புகி
றேன். இத்தகைய தொரு
அரசாங்கமானது பல்
வேறு விடயங்களை
மேற் கொள்ள முடியும்.
அமெரிக்கா உறுதி
யான நிலைப்பாட்டைக்
கொணடிருக்க வேண்
டும் என்பது மிகவும்
முக்கியமான விடயமா
கும். நாங்கள் ஏ்ப்போ
தும் சீரான நிலைப்
பாட்டைக் கொண்டிருக்
கவில்லை என்பதை
நான்ஏற்றுக்கொள்கிறேன்.

கேள்வி: நாடுகளு
க்கிடையில் பாரபட்ச
மான சட்டங்களை அமெ
ரிக்கா கடைப்பிடிப்பதா
கவும் இரட்டை நிலைப்
பாட்டைக் கொண்டிருப்
பதாகவும், குறிப்பாக
இலங்கை தொடர்பில் ஒரு
நிலைப்பாடும் அதே
வேளையில் தனது
கூட்டணி நாடுகளான
இஸ்ரேல் மற்றும் சவுதி
அரேபியா போன்ற நாடு
கள தொடர்பில் பிறிதொரு
நிலைப்பாட்டையும்
கொண்டிருப்பதாகவும்
குற்றம் சுமத்தப்படுவ
தற்கான காரணம்என்ன?

பதில்: யுத்த காலப்
பகுதியில் இலங்கை
யுடன் சவுதிஅரேபியா
வை ஒப்பீடு செய்கிறீர்
கள். இது நியாயமற்
றது. இலங்கையில் சிறு
வர் போராளிகள் மற்
றும் பெண் தற்கொலைக
குண்டுதாரிகள் செய
ற்பட்டுள்ளனர். இலங்
கையை நான் இலங்
கையுடன் மட்டுமே ஒப்
பீடு செய்வேன். வேறெ
ந்த நாடுகளுடனும்
ஒப்பீடு செய்யமாட்டேன்.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு செய்த தவப் பயனாக அவதரித்த சித்தர் பரம்பரையில் கடையிற் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக கருதப்படுபவர் செல்லப்பாசுவாமிகள்.

இவரை தேரடிச் சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமி களின் சீடராக யோக சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார். மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத்திங்கள் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை (29. 01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார்.

# பல சமயத்தவர்களும் ஆசிபெற்ற மார்க்கண்டு சுவாமிகள்

இவரது தந்தையார் பெயர் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக் குட்டி அம்மையார். மார்க்கண்டு சுவாமி களுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர்.

சுவாமிகள் ஆரம்பக் கல்வியை பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும்வடலியடைப்பு சைவ வித்தியாலயத்தி லும் கற்றுபின்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை இந்துக் கல்லூரியில் கற்று கேம்பிறிட்ஜ் சீனியர் தேர்வில் சித்தியடைந்ததுடன் அவரது பாடசாலைப் படிப்பு முற்றுப்பெற்றது.

மார்க்கண்டு சுவாமி கள் தனது ஊரில் அமைந் துள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் சிவத்தொண்டுகள்செய்துதிருமுறைப் பாடல்களைப் பாடி பிரார்த்தனைகளில் ஈடுபட்டார்.

இக்காலப் பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நில அள வைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர்தொழில்கிடைத்தது.

சுவாமிகள் நேரத் திற்கு அலுவலகத்திற்கு செல்லுதல், அன்றாட வேலைகளை அன்றன்றே செய்தல், செவ்வனே செய்தல் ஆகிய தொழில் சீர்த்துவம் தொடக்கத்திலேயே அவரி டம் தெரியலாயிற்று.

சத்தியம், சாந்தம், இன்முகம், பரோபகாரம் எனும் பண்புகளால் ஒரு நல்லவராக மற்றையோரால் மதிக்கப்பட்டார்.

சுவாமி பணத்தை பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரமச்சாரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித் தம் வாய்ந்தவர்.



விடுமுறைநாட்களில்தனது சொந்த ஊரான பிரான்பற்றுக்கு வருகை தந்து பெற்றோரைப் பேணினார்.

சகோதரிகளின் திரு மணச் சடங்கினை நிறைவேற்றினார். கோயில்திருப்பணி, பாடசாலை, வாசிகசாலைஅபிவிருத்திவேலைகளில் ஈடுபட்டார்,

மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை. அடைவதற்காக உபயோகிக்கும்உறுதியையும்உடையவரானார். காலையிலும்மாலையிலும்தியானம்செய்தல்வேண்டும் என்ற ஒழுங்கினை தவறாது மேற் கொண்டார்.

இக்காலப் பகுதியில் தான் யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க்கண்டு சுவாமிகளுக்குக் கிடைத்தது.

தெய்வ சித்தம் எவ் வித சிவத்தொண்டுக்காக அவரை தோற்றுவித்ததோ அத்தொண்டினை நிறைவு செய்வதற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன.

குருநாதரான யோகர் சுவாமிகள் தனது சீடரான மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆன்மீகப் பயணம் தொடர்பானவற்றை தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும் செயலாலும்இடைஇடையேதிருமுகங்கள் மூலமாக உணர்த்தியபின்னர் அவரை சுயமாக இயங்க விட்டார்.

மார்க்கண்டு சுவாமி கள் தியத்தலாவையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறிதுகாலம்தொழில் புரிந்தார்.

இக்காலப் பகுதியில் கல்விமான்கள் நடத்திய சைவசித்தாந்த வகுப்புக்களுக்கும்சென்று வந்தார். சுவாமிகள் 50 ஆவது வயதில் தனது உத்தி யோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கொழும்பில் இருந்து நேரே கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் குடிகொண்டிருந்த கொட் டிலை வந்தடைந்தார். குருநாதரான யோகர் சுவாமிகள் அவரை ஏற்று வண்ணார் பண்ணையில் ஒரு வீட்டில் தங்கவைத்தார்.

பின்னர் கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில் 29.12.1950ஆம் ஆண்டு மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார்.

மார்க்கண்டு சுவாமிகளும் அவ் ஆச்சிரமத் தில் தங்கியிருந்து உயர் ஞான சாதனையில் ஈடு பட்டார்.

சிலவேளைகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவ தொண்டன் நிலையத்திற்கும் சென்று வருவார்.

யோகர் சுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்கவைத்து இராம்ஸபோதத்திற்கு அருளுரை வழங்குமாறு கூறினார்.

சோல்பரிப் பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப் போல அன்பு செலுத்தி எதுவித வசதிகளையும் எதிர்பாராது ஒரு தொண்டனாகவும் தோழனாகவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார்.

அமெரிக்கத் துறவு சுப்பிரமணிய சுவாமி, அவுஸ்திரேலிய பன்றிக்குட்டி சுவாமிகள் உட்பட பல சமயத்தை சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற்று வந்தார்கள்.

சில பௌத்த துறவி கள் கூட மார்க்கண்டு சுவாமிகளை தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.

மார்க்கண்டு சுவாமி கள் தமது அந்திமகாலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் உமது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார்.

அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தனது இறுதிநாட்களில் குளிப்பு, முழுக்கு முதலியவற்றை கைவிட்ட தோடு உணவையும் பெரிதாக சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்து இருந்தபோது வைத்திய கலாநிதி யோகு பசுபதிஅவர்கள் பார்வையிட அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் சும்மாயிருந்துஇரத்தாசிவருடம்வைகாசி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12மணிக்கு கார்த்திகை நட்சத்தி ரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார்.

மார்க்கண்டு சுவாமி கள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன்பிறந்த சகோதரியின் பேரனால் மார்க்கண்டு சுவாமிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சபை அமைந்துள்ள வளவில் மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு அடியார்கள் வழிபட்டு வருகின்றார்கள்.

மார்க்கண்டு சுவாமி சபையால் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

சபையால் மார்க்கண்டு சுவாமிகள் இந்து அற நெறிப் பாடசாலையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் சமூகப்பணி கள், சமயப்பணிகள், கலாசாரப் பணிகள் போன்ற பல பணிகள் சபையால் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன.

ந.சண்முகராசா
ஸ்தாபகர்,
மார்க்கண்டு சுவாமிகள் சபை,
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

# அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து ஆளுநருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைகள் தொடர்பாக வட்டுக்கோட்டை நண்பர்கள் அமைப்பினைச் சேர்ந்த பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநர்றெஜினோல்ட் கூரேயை நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக் கலநதுரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள குடிநீர் பிரச்சினை, வீதி அபிவிருத்தி, இளைஞர் தொழில்வாய்ப்பு ,புதிய தொழிற்சாலைகளை அமைத்தல், புலம் பெயர்ந்தவர்கள் யாழ். மாவட்டத்தில் தமது முதலீடுகளை மேற்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் மறறும் நிறுவனங்கள், கடைகள், அலுவலகங்களில் அமைக்கப்பட்ட பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேற் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம செலுத்துவதாகவும் செயற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை விரைவில் செய்து முடிப்பதற்கு ஆவன செய்வதாகவும் ஆளுநர் உறுதி அளித்துள்ளதாக மேற் குறித்த அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இக் கலந்துரையாடலில் வட்டுக்கோட்டை நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சி.மோகன், மறவன் புலவு சச்சிதானந்தம், சமாதான நீதவான் கே. கோபாலகிருஷ் ணன், எஸ்.சிவராஜா, தி.சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

கண்ணீர் அஞ்சலி



உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்

யாழ். மாவட்ட கல்வி வளர்ச்சிக்கு பெரும் கொடையாற்றி மக்கள் சேவையே மகேசன் சேவையென அயராது பணிசெய்த **உயர்திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்** அவர்களின் இழப்பு பேரிழப்பே. அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி!

(சி-4798)

கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கல்விக்காருண்யன்
கொடைக்கோ
E.S.P. நாகரத்தினம்.

# தமிழ் சினிமா வரலாறு

175

## சிவாஜியின் இளமைப் பருவம்

எனவே ராஜாமணி எப்போதும் நம்முடன் இருக்க வேண்டும். ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு கல்யாணம் செய்து கொடுத்து பெண்ணையும் மாப்பிள்ளையையும் வீட்டோடு வைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார்.

சிவாஜியின் தந்தை சின்னையா மன்றாயர் அதிகம் படிக்காதவர். ஆயினும் ஒரு மிராசுதார். எனவே அவருக்கு ராஜாமணியை திருமணம் செய்து கொடுத்து விட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக் கொண்டார்.

எனினும் சில காலத்துக்குப்பின் சின்னையா மன்றாயர் ரெயில்வேயில் வேலைக்கு சேர்ந்தார். நாகப்பட்டினத்தில் இருந்த ரெயில்வே ஒர்கஷாப்பில் வேலை பார்த்தார். மனைவியுடன் அங்கு குடியேறினார்.

**சிவாஜி பிறந்தார்**

சின்னச்சாமி காளியங்கராயர் வீடு விழுப்புரத்தில் இருந்தது. பிரசவத்துக்காக அங்கு ராஜாமணி அம்மாள் சென்றார். அங்குதான் 1928 ஒக்டோபர் முதலாம் திகதி சிவாஜிகணேசன் பிறந்தார்.

சிவாஜியின் தந்தை சின்னையா மன்றாயர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டார்.

சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர், தீவிரவாத எண்ணம் கொண்டவர்கள். அஹிம்சை மூலம் வெள்ளையர்களைப் பணிய வைக்க முடியாது. துப்பாக்கி ஏந்தினால் தான் நாட்டை விட்டு ஓடுவான் என்ற நேதாஜியின் கொள்கையை கடைப் பிடிப்பவர்கள்.

அப்போதெல்லாம் ஒரு காரியத்தை நடத்துவது யார் என்று திருவுளச்சிட்டு போட்டுப்பார்ப்பார்கள். ஆஷ்துரையை சுட்டுக் கொல்வது யார்? என்று தீவிரவாத இளைஞர்கள் சீட்டுப் போட்டு பார்த்த போது வாஞ்சிநாதன் பெயர் வந்தது. அதனால் அவர் மணியாச்சி ஜங்ஷனில் ஆஷ்துரையை சுட்டுக்கொன்றுவிட்டு தன்னைத் தானே சுட்டுக்கொன்று தற்கொலை செய்து கொண்டார்.

இதேபோல் வெள்ளைக்கார சிப்பாய்கள் செல்லும் ரெயிலுக்கு யார் வெடி வைப்பது என்று சின்னையா மன்றாயரும் அவர் நண்பர்களும் திருவுளச்சீட்டு போட்டுப் பார்த்தார்கள். அதில் சின்னையாவின் பெயர் வந்தது. அதனால் ரெயிலுக்கு அவர் வெடி வைத்தார். பொலிஸார் இதைப்பார்த்து விட்டார்கள். அவரை துரத்திச் சென்றார்கள்.



பெற்றோருடன் சிவாஜிகணேசன்

சின்னையா தப்பி ஓடும் போது அவரை நோக்கி பொலிஸார் சுட்டனர். சின்னையா கீழே விழுந்தார். பொலிஸார் அவரை சூழ்ந்து கொண்டு தடியால் தாக்கினார்.

சின்னையா தலையில் பலத்த காயம் அடைந்தார். அவரை கைது செய்து வேலூருக்கு கொண்டுபோய் வைத்தியசாலையில் சேர்த்தனர். பொலிஸ்காவலுடன் சிகிச்சை பெற்றார். அவர் குணம் அடைந்த போதிலும் காது சரியாகக் கேட்க முடியாமல் போய்விட்டது.

சின்னையா மன்றாயர் கைது செய்யப்பட்ட அதே நாளில் தான் சிவாஜி பிறந்தார்.

**7 ஆண்டு ஜெயில்**

ரெயிலுக்கு வெடி வைத்ததாக சின்னையா மன்றாயர் மீது வழக்கு தொடரப்பட்டது. அதில் அவருக்கு 7 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப் பட்டது. (தொடரும்)

# இலங்கையில் என்ன செய்கிறார்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாங்கள் சில வேளைகளில் எமது கோட்பாட்டில் உறுதியற்றவர்களாக இருக்கின்றோம் என நீங்கள் கூறியது சரி என நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

கேள்வி: பயங்கரவாதம் மீதான ஜனாதிபதி புஷ்ஷின் யுத்தமானது மத்திய கிழக்கில் அழிவு ஏற்படக் காரணமாகியது. ஈராக் மீதான இவரது ஆக்கிரமிப்பானது ஈராக்கில் யுத்தங்கள் தொடரவும், ஐ.எஸ். தீவிரவாதிகள் தோன்றவும் இன்னமும் பல பிரச்சினைகள் ஏற்படவும் காரணமாகியுள்ளன.

பதில்: இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக நீங்கள் வருத்தப்படுவீர்கள். ஐ.எஸ்.தீவிரவாதிகளின் தோற்றத்திற்கு ஈராக் மீதான யுத்தம் முதன்மைக் காரணமல்ல. 100 ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்ட சைஸ்-பிக்கொற் உடன்படிக்கையை இல்லாதொழிக்க விரும்புவதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் ஈராக் மீதான தாக்குதலே ஐ.எஸ். தீவிரவாதிகளை இந்த நிலைக்குத் துாண்டியமைக்கான காரணம் என்பதை நான ஏற்றுக்கொள்கிறேன். பேசியன் அரேபியர்களின் பிரச்சினையும் இத்தீவிர வாதம் தோன்றக் காரணமாகும். இதைவிட மத்திய கிழக்கிலுள்ள சில நாடுகள் எதேச்சதிகார ஆட்சியை மேற கொண்டு வருகின்றன. இவர்கள் தமது ஆட்சி யைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அவர்கள் மேலும் கொடுங்கோலை நடத்துகின்றனர். மத்திய கிழக்கில் இளைஞர்களின் புரட்சியும் இடம்பெறுகிறது. 20 மில்லியன் வரையான இளைஞர்கள் வேலைவாய்ப்பற்று உள்ளனர். இதுவும் தீவிர வாதம் தோன்றக் காரணமாகும்.

கேள்வி: ஆகவே ஈராக்கிய யுத்தமானது தவறானதா?

பதில்: ஆம். இது தவறானது என்றே நான் கூறுவேன். எனினும், சதாம் உசேன் படுகொலைகளைப் புரியும் பாரிய ஆபத்தான ஆயுதப்போரை கைவிடாது விட்டிருந்தால் இதற்கு எதிராக ஐ.நா. எத்தனை தீர்மானங்களை இயற்ற வேண்டியிருந்திருக்கும்? 17 அல்லது 18. ஆகவே ஈராக் மீதான படையெடுப்பை நான் எதிர்க்கவில்லை. ஆனால் ஐ.நாவில் மேலும் பல தீர்மானங்களை இயற்றுவதன் மூலம் ஈராக்கிய யுத்தத்தைத் தடுக்கவே நானும் அமெரிக்கச் செயலர் கொலின் பவலும் முயற்சித்தோம். ஆனால் இந்த யுத்தம் தவறாகியது.

ஈராக்கின் எண்ணெய வளத்தை அபகரிப்பதற்காகவே அமெரிக்கா யுத்தத்தை மேற்கொண்டதாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் யுத்தம் முடிவடைந்தவுடன் ஈராக்கைக் கட்டியெழுப்புவதற்கான பணியை நாங்கள் ஆரம்பித்தோம். ஈராக்கின் எண்ணெய் வளத்தை ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்கா ஆதரவளித்தது. அத்துடன் ஈராக் தானாகவே எண்ணெயை சுத்திகரிப்பதற்கான உதவியையும் அமெரிக்கா வழங்கியது.

கேள்வி: இலங்கைக்கான தங்களின் பயணமானது வர்த்தக நோக்கமற்றது என நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால இந்தப் பயணமானது சமாதானம் மற்றும் மீளிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டது எனவும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

பதில்: 1983 இலிருந்து நான் இலங்கையுடன் தொடர்பைப் பேணி வருகிறேன். 2002 இல், இது தடைப்பட்டிருந்தது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை அமைதி வழியில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை நாங்கள் பெற்றிருந்தோம். 2002 இல் சந்திரிகா குமாரதுங்கவால் முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்புக் கட்டமைப்பை நாங்கள் பார்த்த போது இலங்கையுடனான உறவில் நான் விரிசலை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் பின்னர் பத்து ஆண்டுகள் இலங்கை தானாகவே தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடாக தன்னை ஆக்கிக் கொணடது. தற்போது அனைத்துலக அரங்கில் இலங்கையை மிகச் சரியான இடத்தில் நிலைநிறுத்துவதற்கான இறுதி வாய்ப்பை சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் கொண்டுள்ளனர்.

நாங்கள் பாரியதொரு வேறுபாட்டை ஏற்படுத்துவதாக நினைக்கவில்லை. ஆனால் இலங்கையில் அமெரிக்கர்கள் தமது நேரத்தைச் செலவிட வேண்டும் என்பது இலங்கையின் அரசாங்கத்திற்கும் அனைத்து சிறுபான்மைத் தரப்பினர்களுக்கும் முக்கியமான ஒன்று என்றே நாங்கள் கருதுகிறோம். இலங்கையை நன்கு புரிந்துகொண்டுள்ள, இலங்கையிடமிருந்து இலாபத்தை அடைந்து கொள்ள விரும்பாத அமெரிக்கர்கள் இலங்கையின் நன்மைக்காக இங்கு தமது நேரத்தைச் செலவிட விரும்புவார்கள். அதனால் தான் நாங்கள் இங்கே வர்த்தகத்தை மேற்கொள்ள விரும்பவில்லை. நாங்கள் இங்கு ஏன் நேரத்தைச் செலவிடுகிறோம் என்பது தொடர்பில் நீங்களோ, ரணிலோ, ஜனாதிபதி சிறிசேனவோ, சம்பந்தனோ, சுமந்திரனோ, ரவூப் ஹக்கீமோ அல்லது வேறெவரோ சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை நாங்கள் விரும்பவில்லை. இதனால் தான் நாங்கள் இலங்கையுடன் வர்த்தகநோக்குடன்உறவை விரிவுபடுத்தவில்லை.

கேள்வி: ஆகவே இலங்கைக்கான தங்களதுபயணமானதுபொது நலம் சார்ந்த ஒன்றா?

பதில்: இல்லை. இது எனது நலன் சார்ந்தது. இது எனது நோக்கத்தை அடைவதற்கான இறுதி வாய்ப்பு எனக் கருதுகிறேன். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை அமைதி வழியில் முடிவிற்குக் கொண்டு வருவதற்கான, பயங்கரவாதத்தை மற்றும் பெண் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை, சிறுவர் போராளிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை நாங்கள் கொண்டிருந்த போதும் அது ஏற்றுக் கொள்ளப்படாததன் காரணமாக நான் மிகவும் அதிருப்தியடைந்தேன். இது உலக நாடுகளுக்கான மிகச் சிறந்த உதாரணமாகும். (தொடரும்)

மனிதரின் செயல்கள், அவர்கள் சிந்தனைகளுக்கு சிறந்த விளக்கங்கள் ஆகும்.
- ஜான் லாக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எரிகிற வீட்டில எடுப்பது மிச்சமோ!

எரிகிற வீட்டில எடுப்பது மிச்சம் என்றொரு தமிழ்ப் பழமொழி உண்டு. இப் பழமொழிக்கு பல பொருள் கொடுக்க முடியுமாயினும் இன்று தமிழர்கள் இருக்கின்ற நிலைமையில், தமிழினத்தை வழிப்படுத்திச் செல்ல வேண்டியவர்களின் நினைப்பெல்லாம் எரிகிற வீட்டில எடுப்பது மிச்சம் என்பதாகவே இருக்கிறது. இதனால் தமிழினத்தின் எதிர்காலம் என்பது ஆரோக்கியமற்றதாகிப் போவதை உணர முடிகின்றது.

உலக வரலாற்றில் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகள் தம்மைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை ஒருவித வெறியோடு செய்து முடித்தன.

குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் மிகப்பெரும் அழிவைச் சந்தித்த ஜப்பான், தன்னை அழித்தவர்களுக்கு தான் வாழ்ந்து காட்டுவதுதான் ஒரே வழி என்று நினைத்து அதைச் செய்தும் காட்டியது.

இன்று ஜப்பானின் உற்பத்திப் பொருட்களுக்கு உலக சந்தையில் இருக்கக் கூடிய மதிப்பு எத்துணை என்பதை நாம் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டி இருக்காது.

இதேபோல யூத இன மக்கள் எத்துணை துன்பப்பட்டார்கள். நாடிழந்து வேறுநாடுகளில் குடியேறிய போதிலும் அவர்கள் யூதர்களாகவே வாழ்ந்தார்கள்.

அதன் காரணமாக யூத இனம் தன் இருப்பை நிலை நிறுத்தியது.

ஆனால் விதிவிலக்காக ஈழத்தமிழினம் மட்டும் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்ட பின் அடியோடு மனச்சோர்வுக்கு ஆளாகியது.

தமிழினம் என்பதை நிலை நிறுத்த மறந்தது. உலக நாடுகளும் ஆளும் வர்க்கமும் எங்களை வஞ்சித்து விட்டன என்ற உண்மையை தெரிந்திருந்தும் தமிழர்கள் வாழ்ந்து காட்ட வேண்டும். எங்களை தோற்கடித்தவர்களுக்கு மீண்டெழுந்த இனமாக எங்கள் வரலாற்றை எழுதிக் காட்ட வேண்டும் என்ற நினைப்பு அறவே இல்லாமல் போயிற்று.

அப்படியான ஒரு நினைப்பு சிலரிடம் இருந்ததாயினும் அந்த நினைப்பை சீரழிப்பதற்கு எங்களிடம் ஏகப்பட்ட புல்லுருவிகள் உருவெடுத்தனர்.

இதனால் நாம் எதுவும் செய்ய முடியாமல் போயிற்று. தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக் கலாம். ஆனால் தமிழனின் அறிவியலை, பொருளாதா ரத்தை எவனாலும் எதுவும் செய்ய முடியாது என் பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய நாம் என்ன செய்கிறோம் என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

எல்லோருக்கும் உயர் கல்வி வசதி; எல்லோருக்கும் வேலைவாய்ப்பு; தொழிற்சாலைகளின் உருவாக்கம்; விவசாய உற்பத்திகளின் பெருக்கம்; எங்கள் பண்பாட்டின் மீதான உருக்கம் என்று எத்தனையோ வழிகளால் எங்கள் இனம் தலை நிமிர்த்தினால், தமிழினத்தை எந்தக் கொம்பனாலும் எதுவும் செய்ய முடியாது.

ஆயுதத்தால் மட்டுமே சாதிக்க முடியும் என்றில்லாமல் எங்கள் அறிவியலால், உழைப்பால், முயற்சியால் எம் மண்ணினால் நாம் உயர்ந்து எழ முடியும் என்பதை இனப் பற்றோடு மொழிப் பற்றோடு மண் பற்றோடு செய்வோம் ஆயின் இப்போதும் காலம் கடக்கவில்லை. ஈழத்தமிழர்கள் சாதனையாளர்கள் தான் என்பதை நிரூபிக்க, எதற்கும் தமிழர்கள் ஒற்றுமையும் ஆழ்ந்த சிந்தனையும் பலமான பொருளாதார கட்டமைப்பும் பண்பாட்டு பாதுகாப்பும் இருக்க வேண்டும். இவை இருந்தால் எதுவும் சாத்தியமாகும்.

# தனியார் பஸ் சங்கம் வரி அறவிட முடியாது

## வாசுதேவ எதிர்ப்பு

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், பயணிகள் மீது வரிச்சுமையை திணிக்க அனுமதிக்கப்பட முடியாது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார எம்.பி. தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன, பயணிகளிடம் வரி அறவீடு செய்யப்பட வேண்டுமென வெளியிட்ட கருத்து குறித்து சிங்கள பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாகன நெரிசல் காரணமாக பயணிகளிடமிருந்து வரி அறவீடு செய்யப்பட வேண்டுமென யோசனை முன்வைக்க தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்திற்கு காணப்படும் அனுமதி என்ன?

அவ்வாறான வரி அறவீடு செய்ய மக்கள் செய்த பிழைதான் என்ன? வீதிகள் பாதைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

அரசாங்கத்தின் பிழையொன்றுக்காக சாதாரண பொதுமக்களிடம் வரி அறவீடு செய்ய முடியாது.

கொடூர மிருகங்கள் கூடி மக்களை கொன்று தின்ன முயற்சிப்பதனைப் போன்று வரிக்கு மேல் வரி அறவீடு செய்யப்படுவதனை அனுமதிக்க முடியாது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவுள்ள வருடாந்த பஸ் கட்டண திருத்தங்களின் போது வாகன நெரிசல் கட்டணமொன்றை வரியாக அறவீடு செய்யப்பட வேண்டுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மூவருக்கு மரண தண்டனை

பாலஸ்தீன சுயாட்சி பகுதியான காஷா முனை பகுதியில் ஹமாஸ் இயக்கத்தினர் ஆட்சி செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு வெவ்வேறு கொலை வழக்குகளில் 3 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தண்டிக்கப்பட்டவர்களின் மேல்-முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இருப்பினும் அவர்கள் 3 பேரின் மரண தண்டனையை நிறைவேற்றக் கூடாது என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில் அங்குள்ள மத்திய சிறையில் 3 பேரில் 2 பேரை சுட்டுக்கொன்றும், ஒருவரை தூக்கில் போட்டும் நேற்றுமுன்தினம் மரண தண்டனையை நிறைவேற்றினர்.

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸின் ஒப்புதலை பெறாமலேயே காஷாமுனை ஆட்சியாளர்கள், இந்த நடவடிக்கையை எடுத்திருப்பது பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக ரமல்லா நகரில், பாலஸ்தீன அட்டர்னி ஜெனரல் அகமது பிரேக் கருத்து தெரிவிக்கையில், "3 பேருக்குமரணதண்டனையை நிறைவேற்றி இருப்பது சட்ட விரோதம். பாலஸ்தீன அடிப்படை சட்டத்துக்கு முரணானது" என கூறினார். (இ-5)

# தெமட்டகொடை துப்பாக்கிச் சூடு; மற்றொரு சந்தேகநபர் கைது

தெமட்டகொடை பிரதேசத்தில்சிறைச்சாலைக்கு அருகில் பஸ் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் மேலும்ஒரு சந்தேக நபர்நேற்று கைது செய்யப்பட்டுளளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் முன்னதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், ரி 56 ரக துப்பாக்கி மற்றும் 08 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் 02-ம் திகதி சிறைக் கைதிகளை ஏற்றிச் சென்றபஸ்மீது தெமட்டகொடை பிரதேசத்தில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# கண்டிச் சீமையிலே நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞரும் சமூக ஆய்வாளரும் மொழி பெயர்ப்பாளருமான சட்டத்தரணி இரா. சடகோபனின் கோப்பிக் கால வரலாற்று ஆவண நூலான கண்டிச் சீமையிலே நூல் அறிமுக விழா நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். தேசிய கலை இலக்கிய பேரவை, கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தே.க.இ.பே. யாழ். பேரவை செயலாளர் மு.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக எழுத்தாளர் எம். திலகராஜ் கலந்து கொள்வதுடன், மலை நாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் சாஹித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப் விமர்சன உரையையும், வரவேற்பு மற்றும் அறிமுக உரையை சோ.தேவராஜா (தே.க. இ.பே), நன்றி உரையை இரா. யோக மலர் (தே.க.இ.பே) ஆகியோர் நிகழ்த்துவர். நூலாசிரியர் இரா. சடகோபன் ஏற்புரையை நிகழ்த்தவுள்ளார். (இ-9)

# குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியில் $O^+$,$B^+$ இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவ் இரத்த வகைகள் உடனடியாக தேவைப்படுவதாகவும் வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் ரி.விஸ்வேதிதன் அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி இரத்த வகைகளை வழங்க விரும்புவோர் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



அமைதியாக, மௌனமாக, ஒழுங்காக வேலை செய்தல் வேண்டும். பத்திரிகை பக ட்டும், பெயர், புகழ் ஆசையும் வேண்டாம். எப்போதும் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

கொடுங்கோல் மன்னர்களே! கொடுங்கோன்மை ஒரு பக்கமானால் அடிமைத்தனம் மற்றொரு பக்கம் என்பதை நீங்கள் அறியவில்லை. அந்தோ! அடிமையும் கொடுங்கோன்மையும் ஒரே பொருள் கொண்ட சொல்களே.

கொள்ளை நோயோ, பஞ்சமோ வந்து மக்கள் துயருறும் இடங்களில் எல்லாம், நீங்கள் நீங்கள் அனைவரும் சென்று அவர்களின் துன்பங்களைத் தணியுங்கள். மிஞ்சினால் அம் முயற்சியில் இறக்கலாம். அதனால் என்ன? உங்களைப் போல எத்தனை பேர் புழுக்களைப் போல் தினமும் பிறக்கவும் இறக்கவும் செய்கின்றனர். பரந்த உலகிற்கு அதனால் ஆவதென்ன? இறப்பதோ நிச்சயம். அதனால் இறப்பிற்கும் ஒரு பெரிய குறிக்கோளைக் கொள்க. வாழ்க்கையில் ஒரு பெரும் குறிக்கோளைக் கொண்டு இறப்பது மிக நல்லது. வாசல் தோறும் இக்குறிக்கோளைப் பரப்புங்கள். அதனால் நீங்கள் நன்மையடைவதோடு நாட்டுக்கும் நன்மை செய்வீர்கள். நமது நாட்டின் பிற்கால நம்பிக்கைகள் உங்களையே பொறுத்துள்ளன.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் பிறவுண் வீதி, அரசடி வீதி புகையிரத கடவையிலிருந்து தட்டாதெரு சந்தி வரை, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப் பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, வி.ஏ. தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், சங்கரத்தை, சித்தங்கேணி, சுழிபுரம், சங்கானை, சண்டிலிப்பாய், அளவெட்டி ஒருபகுதி, தொட்டிலடி, விளான், இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, பண்ணாகம், இடும்பன், மாரீசன்கூடல், சாந்தை, தொழில் நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, 'ஹரிகணன் அச்சகம், அண்ணாமலையான் சிறி இராகவேந்திரா என்ரபிறை சஸ் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம், குருமன்காடு கிராமம், கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, SVR, ஆலை, லங்கா ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை, 1ஆம் குறுக்கு வீதி, சூசைப் பிள்ளையார் குளம், பசார் வீதி, கந்தசாமி கோவில வீதி, இறம்பைகுளம், வவுனியா நகரத்திலிருந்து பொகஸ்வேவ வரை மின் தடைப்படும்.(இ-9)

# சமநிலை தவிர்ப்பு உதையில் மனோகரா வி.கழகம் வெற்றி



ஆட்ட நேர முடிவில் எந்த அணிகளும் கோல் பெறாது சமநிலையில் காணப் பட்டதால் போட்டி சமநிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப்பட் டது. சமநிலை தவிர்ப்பு உதை யில் மனோகரா வி.க. 3:2 என வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மனோகரா வி.க. இனியவன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க.மூத்த வீரரும் கழக நலன் விரும்பியுமான இ.ஜீவானந்தம் வழங்கி கௌரவித்தார். (கு)





உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண வல்லவன் தொடரில் முதலாவது சுற்று ஆட்டத்தில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் மனோகரா வி.க. எதிர்த்து தீவகம் சென். ஜேம்ஸ் வி.க. மோதியது.

போட்டியில் இரு அணிகளும் ஒரு சில கோல் பெறும் வாய்ப்புக்களை தவறவிட்ட போதும் பின்கள வீரர்களினை உடைத்து கோல்பெற முடியவில்லை.

## இன்றைய போட்டிகள்

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அராலி A/L விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.50 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இளவாலை ஹென்றீஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியினை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்துகின்றது.

இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

## சித்தி விநாயகர் வி.கழக விளையாட்டு விழா

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டு கழகத்தின் 68 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு 16 ஆவது தடவையாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா- 2016 இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு சித்தி விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. சிறப்பு நிகழ்ச்சிகளாக 115 மைல் சைக்கிள் ஓட் டம், அணிக்கு 4 பேர் கொண்ட கரப்பந்தாட்டம் மற்றும் சிறப்பான போட்டி நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. வெற்றி பெறும் அணைவருக்கும் வெகுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## மாலுசந்தி மைக்கல் காலிறுதிக்கு தகுதி

யாழ்.மாவட்ட ரீதியாக நடைபெற்று வரும் அணிக்கு ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் தொடரில் மாலுசந்தி மைக்கல் அணி காலிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

அச்சுவேலி ரொக்கெட் கலைவாணி அண்ணா, அணிகளை வெற்றி பெற்று அடுத்த நிலைப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இத்தொடரில் தர்சன், பிரசாந், ரகுவரன், வினோத், அச்சுதன், தினோஜன் ஆகியோர் தமது திறமைகளை வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நாளை

## விண்மீன் – நவஜீவன்ஸ் பலப்பரீட்சை



பலாலி விண்மீன்



உடுப்பிட்டி நவஜீவன்ஸ்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் 53 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகங்களுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியாக நடைபெறும் மேற்படி இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். இப்போட்டியில் சம்பியன் ஆகும் அணிக்கு 50 ஆயி ரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் இரண்டாமிடத்தை பெறும் அணிக்கு 25 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளது. (கு)

# உதயதாரகையை வீழ்த்தி சென்.அன்ரனீஸ் அபார வெற்றி







உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் "வடமாகாண வல்லவன்" தொடரில் முதலாவது சுற்று ஆட்டத்தில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் வி.க. எதிர்த்து உதயதாரகை வி.க. மோதியது.

முதற்பாதி ஆட்டத்திலேயே சென். அன்ரனீஸ் வி.க 10,24 ஆவது நிமிடங்களில் சுதர்சன், ஜான்சன் ஆகியோர் 02 கோல்களை அடித்து முன்னிலைப்படுத்தினர். இரண்டாவது பாதி ஆட்டத்திலும் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 33,44,47 ஆவது நிமிடங்களில் றிசிதரன், ஜோன்சன், றோமன் ஆகியோர் கோல்களை அடிக்க 5:0 என சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக சுதர்சன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க மூத்த வீரரும் கழக நலன் விரும்பியுமான உ.பரமநாதன் வழங்கி கௌரவித்தார். (கு)

# வடக்கு அமை...

எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாண சபையின் அமர்வில் வடக்கு மாகாண அமைச்சர்களில் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கு வடக்கு மாகாண உறுபபினர்களில் சிலர் கடும் முயற்சிகளில ஈடுபட்டு கொண்டுள்ளதோடு, தமது செயற்பாட்டிற்கு ஏனைய உறுப்பினர்களிடம் ஆதரவு கோரும் நடவடிக்கைகளும் தற்போது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதுக்குடியிருப்பில் நேற்றைய தினம் நடைபெற்ற புது வசந்தம் தையல் நிலையம் திறப்பு விழாவில் உரையாற்றும் போது,. தனது உரையில் மேற்கண்ட தகவலை வெளிப்படுத்தி உள்ளார். நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் தகவல்கள் கசிந்த நிலையில் முதலமைச்சரது உரை அதனை உறுதிப்படுத்தி உள்ளது.

மேற்படி நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றுகையில்,

எமது அரசியலுக்கும் மேலாக பாதிக்கப்பட்ட மக்களை எப்படி சராசரி மனிதர்களாக சமுதாயத்தில் ஓர் அங்கமாக அவர்களை மாற்றலாம் என்றே அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் நாங்கள் எவரும், எல்லோரும் கொண்டுவரும் பொருளாதார முன்மொழிவுகளை உடனே ஏற்றுக்கொள்ள மாட்டோம். எமது கருத்துரையாளர்களின் கருத்தறிந்தே இதைச் செய்கின்றோம்.

இதனால் எம்மால் பலவிதமான விமர்சனங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. உதாரணத்திற்கு ஒரு சிங்கள நபர் இதுவரை கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஆலையொன்றினைத் தனக்குத் தருமாறு கோரியிருந்தார்.

உண்மையில் எமது கூட்டுறவுச் சங்கமொன்று அதனை நடத்தப் போதிய வசதி இல்லாததாலேயே அவ்வாலை பூட்டிக்கிடந்தது. நாங்கள் எமது திணைக்களம் ஒன்றினால் அதனை ஏற்று செயலாக்க முன்வந்த போதே மேற்படி நபர் அதனைக் கோரினார். நாங்கள் மறுத்ததால் அவர் எமது ஆளுநரைச் சந்தித்து கைவிடப்பட்ட நிலையில் ஆலைகள் பல உண்டு அவற்றை எடுத்து நடத்தவும் வட மாகாணசபைக்கு முடியவில்லை, நாங்கள் கேட்டாலும் தருகின்றார்கள் இல்லை என்று முறைப்பாடு செய்தார். இதனால் ஆளுநர் அதைப் போய்ப் பார்த்துவிட்டு பரிசீலித்துவிட்டு கைவிடப்பட்ட சகல கைத்தொழில் ஆலைகளையும் நாம் தனியாருக்காவது கொடுத்து நடத்த முன் வரவேண்டும் என்றார். இவ்வாறு தான் பல விமர்சனங்களுக்கு நாங்கள் முகங்கொடுத்து வருகின்றோம்.

அதே நேரத்தில் எமது மக்களின் மனம் அறியாது நிலை அறியாது உறுப்பினர்கள் பலர் செயற்பட்டு வருகின்றார்கள். செய்ய வேண்டிய வேலைகள் இருக்கும் போது சிறுபிள்ளைத்தனமான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். எமது அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதாவது இருந்தால் எழுத்தில் ஆதாரத்துடன் தந்தால் உடனே உரிய நடவடிக்கைகள் எடுப்பேன் என்று கூறிய பின்னரும் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டுவரத் தயாராகின்றார்கள்.

ஒருவரின் குற்றங்கள் கையுயர்த்தி ஏற்கப்படும் விடயங்கள் அல்ல. தாருங்கள் நான் உரியவர்களைக் கொண்டு விசாரித்து நடவடிக்கை ஏடுக்கின்றேன் என்றால் எதையும் என்னிடம் கையளிக்காமல் சபையில் சாட விரும்புகின்றார்கள். அமைச்சர்களைப் பற்றி அவதூறுகளை எடுத்து விளம்பவே சபையைப் பாவிக்கப் பார்க்கின்றார்கள். பல நன்மைகளை எதிர்பார்த்து மக்கள் இருக்கின்றார்கள். அதற்காகப் பாடுபடாது எதிர் மறையான காரியங்களிலேயே சிலர் தம் காலத்தைக் கழிக்கின்றார்கள்.

எங்கோ ஒரு தேசத்தில், அந்த நாட்டில் கடும் குளிரின் மத்தியிலும் இரவு பகலெனப் பாராது தமது உடலை வருத்தி உழைக்கின்ற சில அன்பு உள்ளங்களால் கல்வி அபிவிருத்தி, பின்தங்கிய வடக்கு கிழக்கு மக்களுக்கான வாழ்வாதார உதவிகள், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகளுக்கான தையல் நிலையம் என இன்னோரன்ன உதவிகளை ஆற்ற முடியுமானால் நாம் எமது பங்கிற்கு என்ன செய்திருக்கின்றோம்? வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடித்துவிட்டு அதனை போட்டோ பிடித்து புதினப் பத்திரிகைகளில் போடுவது மட்டும் நிறைவாகாது. எனவேதான் நாங்கள் எங்கள் அலுவலர்களை மாற்றி ஒரு புதிய யுகம் சமைக்க ஆவன செய்து வருகின்றோம். எமது தேவைகள் பற்றிய ஒரு கணிப்பறிக்கையை கௌரவ பிரதம மந்திரி அவர்கள் விரைவில் எமக்குத் தயாரித்துத் தருவதாகக் கூறியுள்ளார். முதலில் எங்கள் மக்களின் தேவைகளை முழுமையாக அறிந்து தேவையான நீண்ட காலத்திட்டத்தினை அமைத்து முன்னேற முடிவெடுத்துள்ளோம்.

ஆனால் எங்கள் முயற்சிகள் பயனளிக்கும் வரையில் நீங்கள் காத்துக் கிடக்க முடியாது. அதனால் தான் இப்பேர்ப்பட்ட கொடையுதவிகள் எமக்கு மிகவும் தேவைப்படுகின்றன. எமது கொடையாளிகளுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இங்குள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், மகளிர் அமைப்புக்களும் தங்களுக்குள்ளேயே குழுக்களை அமைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் உதவியாக அவசர தேவைகள், திடீர் செலவீனங்கள் ஏற்படுகின்ற போது தமக்குள்ளேயே உதவி வாழ்க்கை நடத்துகின்ற அந்தத் தன்மை வரவேற்கப்பட வேண்டியது.

இம் மக்களுக்கு எமது அன்புக் கரத்தை நீட்டி சற்று மேலே இவர்களை உயர்த்தி விட்டால் இவர்கள் வாழ்க்கையிலும் வசந்தம் பிறக்கும். முன்னர் கூறியது போன்று இப்போது மகளிர் விவகாரம் தொடரபான திணைக்களம் முதலமைச்சரின் அமைச்சின் கீழ் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மகளிர் அமைப்புக்கள் தொடர்பான விபரங்கள் எமது அமைச்சில் இருந்து விரைவில் கோரப்படும்.

அதன் பின்னர் பெற்ற தரவுகளின் அடிப்படையில் வாழ்வாதார உதவிகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற நல்ல செய்தியையும் உங்களுக்கு தெரிவித்து எங்கள் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும் ஒன்றாக இணைந்து கொண்டு இம்மக்களை முன்னேற்றவாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

# தேருநர் இடாப்பில் மாற்றுத்திறனாளிகள்

(கொழும்பு)

யுத்தத்தினால் கிளிநொச்சி மற்றும் வன்னியில் அதிகளவிலானோர் மாற்று திறனாளிகளாக்கப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தேர்தல்கள் தினததை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த கருத்தரங்கில் உரையாற்றிய அவர்,

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, வன்னி மாவட்டங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் பெயர்களை தேருநர் இடாப்பில் உள்வாங்க அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தேருநர் இடாப்பில் அனைத்து பிரஜைகளையும் உள்வாங்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம். குறிப்பாக இலங்கை பிரஜைகள் அனைவரையும் இடாப்பில் உள்வாங்குவதே பிரதான இலக்காகும். மாற்றுத்திறனாளிகள், விழிப்புலனற்றோர், செவிபுலனற்றோர் என அனைவரையும் தேருநர் இடாப்பில் இணைத்து கொள்ள வேண்டியது அவசியமானது.

கிளிநொச்சி வன்னி மாவட்டங்களில் அதிகளவானோர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை முழுமையாக தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்கு அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயறபட வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்தார். (செ-12)

# சத்தியலிங்...

கடந்த மாதம் 20-ம் திகதி வட மாகாண சுகாதார அமைச்சரின் தொலைபேசிக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததுடன் 12 லட்சம் ரூபாய் கப்பம் கோரியதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் நிமிர்த்தம் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இரண்டு குழுக்களை நியமித்திருந்தார்.

இக் குழுக்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்ணான்டோவின் மேற்பார்வையில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி தலைமையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதன்போது வவுனியா குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.பி.சி.எஸ்.கே செனரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணை மேற்கொண்டு கிளிநொச்சி இரத்தினபுரத்தை பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா புதுக்குளத்தில் வசித்து வரும் 38 வயதுடைய நபரொருவரை நேற்று சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை வவுனியா நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜரப்படுத்திய நிலையில் எதிர் வரும் 17-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் இச் சந்தேகநபர் தன்னை இராணுவ புலனாய்வாளர் எனவும் தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து புனர்வாழ்வு பெற்று வந்திருப்பதாகவும் தெரிவித்து பலரிடம் கப்பம் பெறும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அச்சுறுத்தல் சம்பவம் காரணமாக கடந்த சில நாட்களாக வடமாகாண சுகாதார அமைச்சர் பொது நிகழ்வுகளை புறக்கணித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (செ-12)

# காரின் மீது ஏறிய அமைச்சர்



(கொழும்பு)

உள்துறை வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார பிரதி அமைச்சர் பாலித்த தெவரபெரும நேற்று காலை சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் கலாசார நிலையத்தை திறப்பதற்கு சென்றிருந்தபோது, அங்கு பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக, அமைச்சர் பல்கலைக்கழக நுளைவாயிலிலேயே நிற்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

பின்னர், அவர் சுமார் 2 மணி நேரம் காரின் மீது ஏறி மாணவர்களுடன் கலந்துரையாடி உள்ளார்.

இதன்போது, கலாசார நிலையத்தை திறப்பதைவிட தமக்கு பல பிரச்சினைகள் காணப்படுவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

சகலரும் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்க்கமுடியும் எனவும் அனைத்து பிரச்சினைகளையும் தான் அறிவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

எனினும் மாணவர்களின் எதிர்ப்பு நிலமை தொடர்ந்தும் நீடித்தால் கலாசார நிலையத்தை திறந்து வைக்காமலே அமைச்சர் புறப்பட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. (செ-12)

# அதிகரித்த இராணுவ பிரசன்...

அச்சத்துடன்தான் நகர்கின்றது. நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் இந்த நாடு எப்படி ஆளப்பட வேண்டும் என்று எந்த ஒப்பந்தங்களும் இல்லை. இது ஒரு துரதிர்ஷ்ட நிலைமையாகும்.

கடந்த 60 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், தேசிய சமாதானத்தையும் இன ஐக்கியத்தை உருவாக்குவதற்கும் இது தான் மிகச் சிறந்த கால கட்டமாகும். யுத்தம் நிறைவடைந்து விட்டது. ஆயுத முரண்பாடுகள் இல்லை, ஆயுதக் குழுக்கள் இல்லை ஆகவே இதைவிட சிறந்த கால கட்டம் இருக்கவே முடியாது.

அத்துடன் இரண்டு மிகப் பெரய அரசில் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஆட்சியமைத்து அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை இலங்கை சிறுபான்மை சமூகங்களின் தலைவர்களும் ஆட்சியாளர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றார்கள். ஆகவே அரசியல் தீர்வு காண்பதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கடந்த காலத்தில் ஆட்சியாளர்களும், எதிர்க்கட்சியும் எதிரும் புதிருமாகவே பணியாற்றி வந்தன. ஆனால், அந்த நிலைமை தற்போது இல்லை. மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடனேயே வெள்ளை வான் பீதி உட்பட வாழ்வதற்கு அச்சந்தரும் அனைத்து அநியாய நடவடிக்கைகளும் மாற்றம் கண்டன. ஆனால், புரையோடிப்போயுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இன்னமும் தாமதம் இருந்து வருகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான படிமுறை நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்குக் கசிய விட்டால் அது இனவாதிகளுக்கு சவாலாக மாறி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளை சீர்குலைத்துவிடும் என்பதால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நடவடிக்கைகளை உள்ளரங்கமாக எடுத்து வருகின்றார். அது அரசின் திட்டமிடலாக இருக்கலாம்.

நாட்டின் நல்லிணக்கத்திற்கு மத மற்றும் சமூகத் தலைவர்களின் பங்கு முக்கியமானது. சமூக ஒற்றுமை, சகோதரத்துவம், கருணை, பொறுமை, அன்பு, அஹிம்சை போன்ற குணாம்சங்கள் சகோதரத்துவ மத போதனைகள் மூலம் சமூக் இணக்கப்பாட்டிற்குப் பாரிய பங்களிப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மதத் தலைவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் சமூக ஆர்வலர்களும் என பலர் பங்குபற்றியிருந்தனர். (செ-12)

# நிரந்தர நிய...

ள்ளனர் எனினும் அவர்களுக்கு தகுந்த பதில் வழங்கப்படாமையால கூடியிருந்த தொண்டர்கள் அனைவரும் ஏமாற்றத்துடன் காணப்பட்டனர். இது தொடர்பில் அங்கிருந்த தொண்டர்கள் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார பணிமனைகளிலும் பணிபுரிந்த சுமார் 150 பேர் இன்றய தினம் எமது நிரந்தர நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினோம். இதன் போது 820 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அனுமதி மத்திய அமைச்சினால் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில்,

அதனை வழங்குவதற்கான பணியாளர் வெற்றிடம் தற்போது இல்லை அதனால் நியமனங்களை வழங்க முடியாது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தன்னால் எதுவும் செய்யமுடியாது உள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கூறியிருப்பதனை போன்று வடக்கு மாகாணத்தில் பணியாளர் வெற்றிடம் இல்லை என்பது தவறானதாகும், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை உட்பட பல வைத்திய சாலைகளில் தற்போதும் பணியாளர் வெற்றிடங்கள் உண்டு.

இது தொடர்பில் வடக்கு முதலமைச்சருக்கும் தெரியப்படுத்தி உள்ளோம், எனினும் எமக்கான நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை. ஆகவே தான் நாங்கள் இன்று (நேற்று) வடக்கு மாகாண ஆளுநரினை சந்திப்பதற்கு வந்துள்ளோம். வடக்கு மாகாண ஆளுநரும் வடக்கு மாகாண சபையால் தான் நியமனம் வழங்க முடியவில்லை என கூறியுள்ளார்.

ஆகவே இப்போது நாங்கள் எங்கே செல்வது என்று தெரியவில்லை. எமது இறுதி முடிவு எமக்கான நிரந்தர நியமனம் வழங்கபடாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடுவதே ஒரே வழி என அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# தமிழ் மக்கள்...

நிலத்தில் 200 குடும்பங்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் போர் காரணமாக வீடுகள் அழிக்கப்பட்டன. மீண்டும் மீதமாக இருந்த 60 ஏக்கர்நிலத்தில், 30 ஏக் கர் நிலத்தில் மக்களுக்கான வீடு கள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

தற்போது மீதமாக உள்ள 30 ஏக்கர் நிலத்தில் காணி இல்லாத வாழ்வாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள சுமார் 17 குடும்பங்களை சேர்ந்த மக்கள் குடியேறி வாழ்ந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் குறித்த நிலத்தில் ஒரு பகுதி சிங்கள குடியேற்றத்திற்காகவும், மற்றொரு பகுதி இராணுவத்தினருக்கான குடியிருப்பு அமைப்பதற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்படி நிலத்திற்கு உரிமை கொண்டாடி வரும் இராணுவத்தினர் அந்த நிலத்தில் இராணுவத்தினருக்கான குடியிருப்பு ஒன்றை நிறுவ முய்ற்சித்து வருகின்றனர். குறிப்பாக இந்த நிலத்தில் வாழ்ந்து வந்த 17 குடும்பங்களை சேர்ந்த மக்களை இராணுவத்தினர் கட்டாயமாக வெளியேற்றியிருக்கின்றனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் காணி இல்லாமையினால் நாங்கள் இந்த இடத்தில் குடியேறினோம். சிலர் அண்மையில் வந்து இங்கே குடியேறினாலும் கடந்த 1991ம் ஆண்டு தொடக்கம் இந்த இடத்தில் வாழ்ந்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்களையும் இராணுவத்தினர் இங்கே இருக்க முடியாது. வீடுகளை அகற்றுங்கள் என கூறி வெளியேற்றி விட்டார்கள்.

இந்த விடயத்தை நாங்கள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மகளிர் மற்றும் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோருடன் பேசியிருக்கின்றோம். மேலும் இந்த விடயத்தை நாங்கள் இராணுவத்தினருக்கு கூறி நாங்கள் அவர்களுடன் கேட்டு செய்கிறோம் என கேட்ட போதும் எங்களுக்கு இராணுவத்தினருக்கு அவகாசம் தரவில்லை என மக்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் மேற்படி பகுதியில் ஒரு குடும்பம் தற்போதும் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்களை வீட்டுக்கு கூரை போட கூடாது என இராணுவத்தினருக்கு தடுத்திருக்கும் நிலையில் அவர்கள் வெறும் கட்டிடத்திற்குள் ஒரு மூலையில் தறப்பாள்களை போட்டு அதற்குள் குடியிருக்கின்றார்கள்.

மேலும் அந்த இடத்தை விட்டுவெளியேறினால் தமக்கு வேறு இடம் இல்லை எனவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றார்கள். இதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த மாதம் 9ஆம் திகதி தனது செயலாளர் ஊடாக தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்.மாவட்ட வீடமைப்பு செயலகம், சாவகச்சேரி பிரதேச செயலர் ஆகியோருக்கு கடிதம் மூலமாக குறிப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் நிரந்தர மாக வசிக்கும் காணியற்ற மக்களுக்கு வழங்குவதற்கு போதிய ளவு அரச நிலம் இல்லை.

இந்நிலையில் நாவற்குழி பகுதியில் காணி இல்லாத மக்களுக்கு வழங்குவத ற்கும் அந்த மக்கள் குடியிருப்பதற்கும் இராணு வத்தினருக்கு மற்றும் தேசிய வீடமைப்பு திட்ட அதிகாரிகள் பெரும் தடையாக உள்ளதுடன், வீடுகளை அழித்தும் கைது செய்து பொலி ஸில் ஒப்படைப்போம் என மக்களை அச்சுறு த்துவதாகவும் மக்கள் எமக்கு முறைப்பாடு களை செய்திருக்கின்றார்கள்.

எனவே அந்தப் பகுதியில் காணிகள் இருப்பின் அதனை அப்பகுதியில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கு வழங்கி மாதிரி கிராமம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும், வேறு போலியான எந்த நடவடிக்கைகளுக்கும் வழங்க வேண்டாம் எனவும் முதலமைச்சர் அந்த கடிதத்தில் கேட்டிருக்கின்றார். இந்நிலையிலும் 17 குடும்பங்கள் வாழ்ந்த அந்த இடத்தில் 1 குடும்பம் தவிர மற்றைய 16 குடும்பங்களையும் அங்கிருந்து இராணுவத்தினர் மற்றும் வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் வெளியேற்றியிருக்கின்றனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

# ஜனாதிபதிக்கு...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் ஆட்சி மாற்றத்தினை தொடர்ந்து சீனாவுடனான பொருளாதார உறவும், அரசியல் உறவும் முற்றாக பாதிப்பட்டுள்ளதாக எதிர்த் தரப்பினர் பல விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சீனாவிற்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு சீன ஜனாதிபதி ஜின்பிங் அழைப்பு விடுத்துள்ளார். இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

மேலும் எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 25 வீதத்திற்கும் அதிகமாக வெளிநாட்டு கடன்களை செலுத்துவதற்கு செலவாகின்றது. இந்த நிலை நீடிக்காதிருக்க தற்போது எமக்கு கிடைத்துள்ள சீனா உள்ளிட்ட நாடுகளின் உறவை வலுப்படுத்திக் கொள்வதே சிறந்தது என்றார். (செ-12)

# சம்பந்தனின்...

த்து வரும் நிலையில், அதைக் குழப்பியடிப்பதற்கு சிலர் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர் என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறப்பானதொரு வெளிவிவகாரக் கொள்கையை பேணுவதே அரசின் நோக்கமாகும். ஆனால், தமிழக முதலமைச்சர் இறுக்கமான போக்கையே கடைபிடிக்கின்றார்.

இலங்கைத் தமிழர்கள் எதை எதிர்பார்க்கின்றனர் என்பது அவருக்குத் தெரியாது. இன்னும் இனவாத அரசியல்தான் செய்கின்றார். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியொன்றின் தலைவர் இருக்கையில், அதன் உறுப்பினரான வடக்கு மாகாண முதலமைச்சரை தமிழக முதலமைச்சர் ஏன் சந்திக்க வேண்டும்? இலங்கைத் தமிழ் மக்களுக்கு சிறந்ததொரு அரசியல் தீர்வைப் பெறுவதற்கு சம்பந்தன் முயற்சித்து வருகின்றார். மத்திய அரசுடன் முரண்படாமல் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். இப்படிப்பட்ட சீரிய தலைவரின் முயற்சியை குழப்பும் முயற்சியில் சிலர் இறங்கியுள்ள னர் என நீதி அமைச்சர் தெரிவித்தார். (செ-12)

# வாகன விபத்தில்...

வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி விபத்து தொடர்பில் ஒருவரை மாங்குளம் பொலிஸார் கைது செய்ததோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15,281)

# தனியார் சிற்றூர்தி...

மாவட்டங்களுக்கான சேவைகளில் ஈடுபடும் இ.போ.ச பேருந்துகள் கோண்டாவிலில் உள்ள யாழ்.சாலையினை வந்தடையும் போது பயணிகளை ஏற்றி வருகின்றார்கள். அதே போன்று யாழ்.சாலையில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்திற்கு செல்லும் போதும் பயணிகளை ஏற்றி வருகின்றார்கள்.

இவை இரண்டு செயற்பாடுகளும் தனியார் சிற்றூர்தியினரின் பயண நேரங்களில் வேண்டுமென்றே செய்யப்பட்டு வருகின்றது. இதனால் பயணிகள் எவரும் இல்லாமலும் நாங்கள் சேவையில் ஈடுபட வேண்டிய நிலை கூட ஏற்படுகின்றது. இதனால் சில வேளைகளில் இரு பஸ்களும் கலைபடுவதும் உண்டு. ஆனால் இதற்கு தனியார் சிற்றூர்தியினர் காரணம் இல்லை.

பயண நேர ஒழுங்குகளை மீறி பயணிகளை ஏற்றும் இ.போ.சவினாலேயே இந்நிலைமை ஏற்படுகின்றது. இதுபோன்ற சம்பவத்தினால் ஆத்திரமடைந்த இ.போ.ச ஊழியர்கள் இன்று (நேற்று) சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் சிற்றூர்தியினை பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ்.சாலைக்கு முன்பாக மறித்து தாக்குதல் நடத்தியுள்ளனர். சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு காயத்திற்குள்ளானவர்களை கைது செய்து அழைத்துச் செல்லப்படுவது போல் பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச் செல்லுகின்றார்கள்.

ஆனால் தாக்குதல் நடத்திய இ.போ.ச ஊழியர்களை அவர்களுடைய வாகனங்களில் வருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளனர்.

இருப்பினும் நாங்கள் கோப்பாய் பொலிஸ நிலையத்தில் சென்று முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளோம் என்றனர். இது தொடர்பாக இ.போ.ச ஊழியர்களிடம் கேட்ட போது, தனியார் சிற்றூர்தியினர் சட்டவிதிமுறைகளை மீறி பயணிகள் சேவைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்களுடன் எங்களுக்கு முரண்பாடுகள் ஏற்படுகின்றது.

இவ்வாறு முரண்பாடுகள் ஏற்படும் போது அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை தாங்கிக் கொள்ள முடியாமல் உள்ளது. இதனாலேயே இன்று (நேற்று) இந்த சம்பவமும் நடந்தது என்றனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தெரிவிக்கையில், இச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளனர். (செ-4)

# புலிகள் மீதான...

இதனால் தடையை நீடிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச தொடர்புகள் மற்றும் புலம் பெயர் தமிழர்களைப் பயன்படுத்தி வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா போன்ற நாடுகளில் ஆயுதங்களை கொள்வனவு செய்யவும், நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் ஊடாக நிதி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதாகத் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்குதல்கள் இடம்பெறவில்லை.

எனினும், 13 தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதில் சிலர் 2014 ஆம் ஆண்டு இந்தியாவில் அமைந்துள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் 2015 ஆம் ஆண்டு மலேசியாவில் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிக ளுக்காக நிதி திரட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள தலைதூக்கிவிடக் கூடும் என்ற அச்சத்தினால் இலங்கை அரசாங்கம் வடக்கில கடுமையான இராணுவ பிரசன்னத்தை தொடர்ந்தது எனவும், தமிழ் சமூகத்துடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.(செ-12)


Win Repair

A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு - 077 9648942 (4852)

கார்கள் வாடகைக்கு உண்டு

Axio, Premio, N16, N15, DAEWOO (4853)

தொடர்புகளுக்கு ☎ 077 996 1250

கணனி திருத்தம்

உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா ?

அதி வேகமாக அதிநவீன முறையில் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் (4850)

077 3131 622

Dutch, Deutsch, French

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழி கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன ******

(C-4790)

Vivekananda Academy

221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

0213216928 077 4842 464 (Gov. Reg: W/A 76795)

INFORMATION TECHNOLOGY PARK

ITP

Jaffna, Srilanka

Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்ப பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

MAY BATCHES

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course

- Dip.in PC Application & Office Management

Languages

- VB.net
- PHP
- C Sharp
- Java

Workshops

- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்-10.06.2016

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம்-11.06.2016

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

- Executive Officer -


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.